# நங்கை

மாதர் மாத இதழ்



NANGAI

WOMEN'S MONTHLY JOURNAL

# நங்கை
**2 | 89**

*ஆசிரியர்:*

திருமதி சரோஜா சிவசந்திரன்
B. A. Hons. (Cey.), M. A (Jaf )

*நிர்வாக ஆசிரியர்:*

இரா. பாலச்சந்திரன் B. A. (Cey.)

*வெளியீடு:*

மகளிர் அபிவிருத்தி நிலையம்,
07, இரத்தினம் ஒழுங்கை,
கே. கே. எஸ். வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

*அச்சுப்பதிவு:*

நியூ ஈரா பப்ளிக்கேசன்
யாழ்ப்பாணம்

தனிப் பிரதி : ரூபா 10.00
ஆண்டுச் சந்தா : ரூபா 125.00
(தபாற் செலவு உட்பட)

வெளிநாடு: (தபாற் செலவு உட்பட)
தனிப்பிரதி : ரூபா 45.00
ஆண்டுச் சந்தா ரூபா 540.00

சந்தா : காசுக்கட்டளையாகவோ, தபாற்கட்டளையாகவோ ஆசிரியரின் பெயருக்கு, தபாற் கந்தோர் நீராவியடி எனக் குறிப்பிட்டு அனுப்புக. காசோலையாகவும் அனுப்பலாம்.

| | |
|---|---|
| **Mangai** — | Women's Monthly Magazine. |
| *Published by.* | **Centre for Women and development.**<br>07, Ratnam Lane, off. K. K. S. Road, Vannarpannai, Jaffna, Sri Lanka. |
| *Editor:* | **Mrs. Saroja Sivachandran, B. A, Hons (Cey.), M. A. (Jaf )** |
| *Managing Editor:* | **Ra. Balachandran, B. A. (Cey.)** |

# பெண்களும் அபிவிருத்தியும்

'அபிவிருத்தி' இன்று பலராலும் பேசப்படும் சொல்லாகிவிட்டது. பொருளாதார அபிவிருத்தி, சமுதாய அபிவிருத்தி, கலை, கலாசார அபிவிருத்தி, பெண்களின் அபிவிருத்தி ...... என்ற வாறெல்லாம் உலகெங்கும் மூலைமுடுக்கெல்லாம் குரல்கள் கேட்கின்றன.

ஆரம்பகாலங்களில் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைதலே அபிவிருத்தியெனக் கொள்ளப்பட்டது. அவ் அபிப்பிராயத்திலிருந்து இன்னும் சிலர் விடுபடவில்லை.

நவீன சிந்தனையின் வெளிப்பாடாக அபிவிருத்தி பற்றி — அச்சொல் குறிக்கும் பொருள்பற்றிப் பல அறிஞர்கள் பல்வேறு விளக்கங்களை முன்வைத்துள்ளனர். இவை பெண்கள் தொடர்பான அபிவிருத்திச் சிந்தனைக்கும் பொருந்துவதாகும். ஒரு நாட்டின் அபிவிருத்திக் குறிகாட்டிகளும் அவற்றைப் பெண்களின் அபிவிருத்தியுடன் இணைத்துப் பார்க்கும் பார்வைகளும் பின்வருமாறு:

1. ஒரு பகுதி அபிவிருத்தியுற இன்னொருபகுதி அபிவிருத்தியுறாது இருப்பது அபிவிருத்தியல்ல. பரவலாக எல்லாப் பகுதிகளும் அபிவிருத்தியுறுதலே மெய்யான அபிவிருத்தியாகும்.

* இங்கு ஆணும் பெண்ணும் எந்தவகையிலும் ஏற்றத் தாழ்வு அற்றுச் சமமாக வளர்ச்சியடைய வேண்டுமென்பது வற்புறுத்தப்படல் வேண்டும்.

2. வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் அதாவது உணவு, வீடு, சுகாதாரம், பாதுகாப்பு என்பன.

* உணவு நுகர்வில் பெண்களைவிட ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுவது எமது சமூகத்தில் நிலவும் வழக்கமாகும். மேலும் பெண்களுக்கு எமதுசமூகத்தால் பூரணபாதுகாப்பு வழங்கப்படுகின்றதெனக் கூறமுடியாது.

3. சுயமரியாதை, கௌரவத்துடனான வாழ்வு.

* பெண்களுக்கான சுயமரியாதை எமது சமூகத்தில் உரியபடி வழங்கப்படுவதும் இல்லை, பேணப்படுவதுமில்லை. பெண்கள் மரியாதைக் குறைவாக நடத்தப்படுகின்றார்கள் - அகௌரவப் படுத்தப்படுகின்றார்கள்.

4. தேர்வு செய்வதற்கான சுதந்திரத்தையும் அபிவிருத்திக் கருத்து வலியுறுத்துகிறது.

* பெண்களுக்குத் தமது சொந்த வாழ்க்கையைத் தீர்மானிப்பதற்காகவாவது எமது சமூகம் உரிமை வழங்குகின்றதா ? கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எத்தனை பெண்களுக்கு உண்டு?

இங்கு குறிப்பிட்டுக்காட்டிய பெண்கள் தொடர்பான அபிவிருத்தியின்மைகள் களையப்படும் வரை எமதுநாடு, சமூகம், கலாசாரம் என்பன அபிவிருத்தியடைந்துள்ளன எனக் கூறமுடியாது. அபிவிருத்தியை வேண்டுவோர் வாய்வீச்சில் வீரர்களாக இல்லாது மேற்படி குறைபாடுகளைத் தீர்க்கத் தீவிரமாக முயலவேண்டும்.

### அழகே அழகு.

இப்படி ஒரு தரமான-அழகான-குளிர்ச்சியான அட்டைப்படத்தை இதுவரை எந்தச் சஞ்சிகையிலும் நாங்கள் பார்க்கவில்லை. 'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்ற மலர்ச்சியும் முறுவலும் தவழும் வண்ணப்படம் பெண்களுக்கு உற்சாகத்தை ஊட்டுகின்றது. நங்கை மலர்ச்சியாகவே இருப்பாள்.

கு. கோசலை, காங்கேசன்துறை.






### முதல்தரத்தகுதி

நங்கை அழகாக இருக்கிறாள். கருத்துக்கள் ஓரளவு தரமாக அமைந்துள்ளன. முதல் இதழ்தானே, எதிர்காலம் நிறைய உண்டு. முதல் தரமான இடத்தைப் பிடிக்கக்கூடிய தகுதிகள் ஆற்றல்கள் மிளிருகின்றன.

இராஜி சண்முகநாதன், சாவகச்சேரி.

### புத்தம்புதுக்கலை

அட்டைப்படம் அருமை. சர்வதேச தொழில் நுட்ப தரத்தை எட்டிய "ஒவ்செட்" அச்சுப்பதிவு. எமது மண்ணிலும் இவ்வளவு திறமைவாய்ந்த தொழில் நுட்பக்கலைஞர்கள் உள்ளார்களா? புத்தம் புதிய கலைகளை நங்கை வளர்க்கட்டும்.
உயர்க; வாழ்க.

இ. குமரேசன், மீசாலை.

### புதியதைப் போடுங்கள்

சஞ்சிகைகள் ஆயுட்காலத்திற்கு சில விட்டுக் கொடுப்பு அவசியம் எனினும் மேம்போக்கான கட்டுரைகளைத் தவிர்ப்பதும்; ஆக்கபூர்வமான இதுவரை ஏனைய சஞ்சிகைகள் தொடாத விஷயங்களை நங்கை வெளிக்கொணர்வதும் அவசியமும் தேவையானதும் ஆகும்.

என். அந்தரவேல், காரணவாய்

### சவால்

அட்டைப்படம் தென்னிந்திய பத்திரிகைக்குக் சவால் விட்டு, நாம் சளைத்தவர்கள் அல்ல எனக்காட்டிற்று. உள்ளடக்கம் அப்பத்திரிகைகள் போல் உப்புச் சப்பென்றில்லாது அமைந்திருந்தது. இன்றைய கால கட்டத்திற்குத் தேவையான இணைப்பு.

பரம், யசோதா, வேலணை.

### என்ன பயன்

அட்டைப்படத்தின் மூலம் என்னத்தைச் சொல்ல வருகின்றீர்கள்? மக்களுக்கு இதனால் என்ன பிரயோசனம்? பணம் இன்று வரும் நாளை போகும் அதற்காக மக்களுக்குக் கவர்ச்சி காட்டிப் புத்தகம் விற்க வேண்டுமா?

ஒரு ரசிகர், ஊரெழு

(கவர்ச்சி வேறு. அழகு வேறு மேன்மையான கலை என்பதே ஒன்றை அழகாக-நேர்த்தியாகச் சொல்வதுதான். உலகப் புகழ் பெற்ற 'வீனஸ்' சிலை ஒரு கலைப்படைப்பு. அது என்னத்தைச் சொல்கிறது எனக் கேட்கலாமா? அழகான புகைப்படமே ஒரு கலைப்படைப்பே அழகியல் பார்வையை வளர்த்துக்கொள்க.)

# நோயற்ற வாழ்வே...

**(டாக்டரின் பதில்கள்)**

கேள்வி : திருமணம் செய்து எவ்வளவு காலங்களுக்குக் குழந்தைப் பேறு இல்லாதிருப்பின் வைத்திய ஆலோசனை பெற வேண்டும்?

க. நளினி, வேலணை.

பதில் : தகுந்த வயதில திருமணம் செய்து கொண்டவர்கள் 2½ — 3 வருடங்களுக்குள் குழந்தைப் பேறு கிடையாவிடின் கணவன், மனைவி இருவருமே வைத்திய ஆலோசனை பெறவேண்டும். வயதாகியபின் திருமணம் செய்தோர் மேலும் காலத்தை வீணுக்காது உடனடியாக ஆலோசனை பெறுவது நன்று.

கேள்வி : குடும்பக்கட்டுப்பாட்டுச் சத்திரசிகிச்சை (Vasectomy), செய்த ஆண் ஒருவர் மனைவியை இழந்ததால் மறுமணம் செய்ய எண்ணுகிருர். அவர் மறுபடியும் சிகிச்சை பெற்று குழந்தைக்கு தந்தையாக முடியுமா?

எஸ். மதிவதனன், பரந்தன்.

பதில் : எமது நாட்டில் பொதுவாக இதனைச் செய்யமுடியாது. அவ்வாறு முயற்சித்தாலும் 50 வீதமே வெற்றிக்கு வாய்ப்புண்டு. அவருக்கு ஏற்கனவே உள்ள குழந்தைகளே போதும் என்ற மனநிறைவுடன் மணம்புரிந்தால் என்ன?

கேள்வி : பெண்கள் கருத்தடைச் சத்திரசிகிச்சை (L.R.T.) செய்து கொண்டபின் மணவாழ்வில் பிடிப்பற்றவர்களாக மாறிவிடுகின்றனர் என்ற கருத்து உண்மையா?

சி. கலாமாலினி, சங்கத்தானை

பதில் : தவறு, மிகத்தவறு. மேற்படி சிகிச்சை பெற்றவர்களின் மணவாழ்வில் எச்சிறுமாற்றமும் இதனுல் ஏற்படாது. இன்னும் சொல்லப்போனுல் அவர்கள் எந்தவித பயமுமின்றி நிம்மதியாக மண உறவுபெற்று மகிழலாம்.

கேள்வி : வயது 30. ஆண். தலைமயிர் உதிர்வது அதிகமாக இருக்கிறதே ஏன்?

எஸ். காந்தரூபன், யாழ்ப்பாணம்.

பதில் : வாரத்திற்கு இருதடவையாவது தலையைக் கழுவிச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். குறைந்தது வாரம் இருமுறை எண்ணெய் வைத்துவர வேண்டும். சொடுகு, பேன் இல்லாது பாதுகாக்கவேண்டும். இவற்றினைக் கடைப்பிடித்தும் உதிருமாயின் வைத்திய ஆலோசனை பெற்று விட்டமின் மாத்திரைகளைப் பாவிக்க வேண்டும்.




## மரக்கறி சூப் (இத்தாலியமுறை)

சூப்பு தயாரித்தல் உணவு பாகமுறையில் மிகச் சிறந்ததும் இலகுவானதுமாகும். சூப்புத் தயாரித்தலில் மனையாளின் தராதரத்தையும் அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். தனது பாவனைக்குத் தேவையான மரக்கறி வகைகளையோ, மாமிச வகைகளையோ எடுத்து விட்டுக் கழிவுப் பொருட்களாக மீதம் இருக்கும் துண்டுகளை இத்தயாரிப்பிற்காகப் பயன் படுத்தலாம்.

சில சமயங்களில் சூப்பு பசியைத் தூண்டும் உணவாகவும் சில சந்தர்ப்பங்களில் முழு உணவாகவும் கொள்ளப்படுகின்றது.

தேவையான பொருட்கள்:-

- தக்காளி (நடுத்தரம்) – 4
- வெண்ணெய் – 3 மே. கரண்டி
- பெரிய வெங்காயம் – 1
- லீக்ஸ் - 2
- கரட் – 3
- நூடில்ஸ் – 100 கிறும்
- சீனி – 1 மே. கரண்டி
- உப்பு, மிளகு அவைக்கேற்ப
- சீஸ் – சிறிய டின்-1

செய்முறை:

மரக்கறி வகைகளைச் சுத்தம் செய்து கழுவி சிறு துண்டுகளாக நறுக்கவும். நறுக்கிய மரக்கறி வகைகளையும் வெண்ணெய்யையும் சேர்த்துப் பாத்திரத்திலிட்டு மெல்லிய நெருப்பில் வைத்து மூடிவிடவும். மரக்கறிவகை நிறம் மாறாது இருக்கக்கூடிய விதத்தில் புரட்டி விடவும். பின் உப்பு மிளகு சேர்த்து தேவையான அளவு நீர் சேர்க்கவும் (4 தே. கோப்பை) இக் கலவை நன்கு கொதித்து மரக்கறி அவிந்ததும் நூடில்சைச் சேர்க்கவும். இறுதியில் இவை நன்கு அவிந்ததும் சீனி சேர்த்து இறக்கிப் பரிமாறும் போது சீஸ் துருவலைத் தூவிப்பரிமாறவும்.

திருமதி நவரத்தினம் சாவித்திரி

## மரவள்ளிக் கிழங்கு பகோடா

தேவையான பொருட்கள்.

- மரவள்ளிக் கிழங்கு – ½ கிலோ
- அவித்த கோதுமை மா – 1½ சுண்டு.
- காய்ந்த மிளகாய் – 15
- வெங்காயம் – 10
- பெருஞ்சீரகம் – 1 மே. கரண்டி
- கறிவேப்பிலை – 4 நெட்டி
- உப்பு தேவையான அளவு

செய்முறை:

முதலில் மரவள்ளிக் கிழங்கை தோல் நீக்கி மரக்கறி கட்டரில் துருவிக் கொள்ள வேண்டும். பின் மிளகாயை அளவான உப்புடன் சேர்த்து அரைக்க வேண்டும். வெங்காயத்தையும் கறிவேப்பிலையையும் குறுணலாக அரிய வேண்டும். துருவிய கிழங்கு, மா, அரைத்த மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை பெருஞ்சீரகம் என்பவற்றை சேர்த்து சிறிது நீர் விட்டு பிசைய வேண்டும், எண்ணெய் நன்றாகக் கொதித்ததும் கலவையை அளவாக கையிலெடுத்து விரலிடைகளால் எண்ணெயில் விழும்படி பிழிய வேண்டும். சிவந்து கரகரப்பாக வந்ததும் வடித்து எடுத்து பரிமாறலாம்.

ராணி குணநாயகம்
காங்கேசன்துறை.

# மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண் தொழிலாளர்கள்

— சரோஜா சிவச்சந்திரன்

## உண்மை நிலை

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ள பெண் தொழிலாளர்களை இரண்டு வகையினுள் அடக்கலாம்.

1. வீட்டு வேலைகள் அல்லாத வேறு தொழில் செய்வோர்.
   (எண்ணிக்கையில் குறைவான இவர்கள் சுத்திகரிப்போராக ஆடை, தைப்போராக, தாதிமாராக, மேற்பார்வையாளராக தொழிலாற்றுகின்றனர்)

2. வீட்டுப் பணிக்காகச் செல்லும் தொழிலாளர்கள். ( பெரும்பான்மையானவர்கள் இவ்வகையினுள் அடங்குவர். வீட்டுப் பணிகள் குழந்தைகளைப் பராமரித்தல் போன்றவற்றையே செய்கின்றனர்)

இவ்விரண்டு வகைத் தொழிலாளர்கட்கும் உள்ள வேறுபாடு யாதெனில் வீட்டுப் பணிக்காகச் செல்லும் தொழிலாளர்கட்கு இந் நாடுகளில் எவ்வித சட்டங்களாலும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. ஆனால் வீட்டுப்பணி அல்லாத வேறு தொழில்களுக்குச் செல்பவர்களுக்கு தொழிற் சட்டங்கள் பாதுகாப்பு அளிக்கின்றன. ஆயினும் இவ்விருவகை தொழிலாளர்களும் பல் வேறுவகையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

**வீட்டுப் பணிக்காகச் செல்பவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் :**

1. வழங்கப்படும் வேலை கனமானதாகவும், அதிகமானதாகவும்,எவ்வித ஒய்வுமின்றி, விடுதலையின்றி உழைக்க வேண்டியுள்ள நிலை.

2. உடல் நோவுடன் வீட்டிலிருந்து பிரிந்து வந்த மனத் துன்பம்.

3. தாய்நாட்டில் காணப்படும் பிரச்சினைகள்.

## உண்மைக் கதை

இயற்கையால் வஞ்சிக்கப் பட்ட வளமற்ற யாழ்ப்பாணக் கிராமம் ஒன்றிலிருந்து வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த இளம் பெண் நிர்மலா (கற்பனைப் பெயர்) 'டுபாய்' சென்ற கதையே இது.

வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்கும் பலரைப் பார்த்த ஆசையால் உந்தப்பட்டு காணியை விற்று காசுபெற்று தம் பொருளாதார நெருக்கடி தீருமென்ற நம்பிக்கையுடன் தன் இளம் மகளை 'டுபாய்'க்கு அனுப்பிவைக்கின்றார் வயது வந்த பெற்றோர். மூன்று மாதத்தின் பின்னர் வெறும் கையுடன் உடுத்த உடையுடன் தன் மனக்கோட்டைகள் எல்லாம் சரிந்த நிலையில் நிர்மலா திரும்பி வந்தாள்.

அவளுக்கு என்ன நடந்தது? நேரில் அவளைச் சந்தித்தபோது அவள் சோகம் ததும்பும் குரலில் கண்களில் நீர் பனிக்க பின் வருமாறு கூறினாள்.

'டுபாயில்' ராஜ்சுரிமா என்னுமிடத்தில் ஆமனு என்னும் பெண் எஜமானிக்கு வீட்டுப் பணிப் பெண்ணாக நான் அனுப்பப்பட்டேன். ஆமனுவின் கணவர் ஒரு பொலிஸ் அதிகாரி. அவருக்கு இரு மனைவியர் உண்டு. ஒருவர் ஆமனு. அவருக்கு ஒரு குழந்தை. இரண்டாம் மனைவிக்கு ஆறு குழந்தைகள். எல்லோரும் ஒரே வீட்டிலேயே வசிக்கின்றனர்.

......நிலை

4. தனிமை மற்றும் அந்நாடுகளில் நில வும் கலாசார ஒழுங்கு முறைக்கமைய வீட்டிற்குள்ளேயே அடைபட்டிருத்தல்.

5. ஏசுதல் முறைகேடாக நடத்தல், அடித் தல், சித்திரவதை செய்தல் போன்ற வற்றிற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை.

6. ஊழியக் கொடுப்பனவுகள் ஒழுங்காக வழங்கப்படாமை.

7. இலங்கையிலுள்ள தனது குடும்பத்தாரு டன் முறையாகக் கடிதத் தொடர்புகள் கொள்ளமுடியாமை.

8. தொழில் செய்பவரின் சம்மதமின்றி உள்ளே வேறு இடங்களுக்கு மாறிச் செல்ல இயலாமை.

9. வீட்டுப்பணிக்கு அமர்த்தப்பட்ட பெண் களுடன் அவ்வீட்டு எஜமான் பாலுறவு கொள்ளுதல்; அல்லது தனது நண்பர் களை மகிழ்விக்க பாலுறவு கொள்ளும் படி வற்புறுத்துதல்.

10. இலங்கையிலுள்ள தொழில் வழங்கும் முகவர் நிலையங்கள் வெளிநாட்டு முக வர் நிலையங்களுடன் கொண்டுள்ள முறைகேடான தொடர்புகள் காரண மாக தொழில் பெறுபவர் அந்நாடுக ளைச் சென்றடைந்ததும் அவர் பற்றி அக்கறை கொள்ளாது இருத்தல்.

11. ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் உடன் திருப்பி அனுப்பாமை.

வீட்டு வேலை அல்லாத வேலைகட்கு செல் பவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்:

1. ஒப்பந்த விதிக்குக் கட்டுப்படாமை.

2. தொழிலாளர்களை தகுதி அடிப்படை யில் நோக்காது தரம் குறைந்து மதித் தல்.

3. ஒழுங்கு நடவடிக்கை அடிப்படையில் வேலை நீக்கம் செய்தல்.

4. ஒப்பந்த நியதிகட்கு அப்பால் வேலை செய்ய நிர்பந்தித்தல்.

...கதை

*அங்கு நான் அதிகாலைமுதல் — நம்பமாட்டீர்கள் ஆனால் உண்மை — இரவு 12 மணிக் குப் பின்னரும் பணியாற்றும் படி பணிக்கப்பட்டேன். இரவு 12 மணியளவில்தான் அங்கு குழாயில் நீர்வரும். அப்போது பூந்தோட்டத்திற்குத் தண் ணீர் விடுவேன். அதன் பின்பு தான் நான் குளிக்கவோ, தலை சீவவோ அனுமதிக்கப்படுவேன். இவ்வளவு வேலை செய்தும் ஆமனு என்னைக் கேவலமாக நடத்தினார். எதற்கெடுத்தா லும் திட்டும், ஏச்சும் அடியும் தான். குழந்தைகளும் அடிப்பர். கற்களால் எறிவர், துப்புவர், தலைமயிரைப் பிடித்திழுப்பர்... ...*

*வீட்டவர் குடும்பமாக வெளியேசென்றால் கிடைக்கும் இரு நேரச் சாப்பாடும் இல் லாது இருக்க வேண்டிய நிலை. பொதுவாக எனக்கு வழங்கப் பட்ட உணவு மோசமானதே. காலை உணவு தருவதில்லை. எஞ்சிய காலை உணவு நண்பக லுக்குத் தரப்படும் நண்பகல் எஞ்சிய உணவே இரவு தரப் படும்.*

*இவை மாத்திரமா துன்பம் ...... எஜமான் சில வேளை என் கைப்பிடித்துஇழுத்து தன்காம வெறிக்குஉட்படுத்த முனைவார். நான் என் பெண்மையைக் காப்பாற்ற பெரும்பாடு பட வேண்டியதாயிற்று.*

*இக் கொடுமைகளைச் சகிக்க முடியாது ஒரு நாள் தந்திர மாக வெளியேறிப் பொலிசில் தஞ்சமடைந்தேன். பொலிஸ் பாதுகாப்பில் ஒரு மாதம் வரை இருந்தேன். என்னைப் போல பல இளம் பெண்கள் அங்கு தஞ்சமடைந்து இருந்*

......நிலை

5. ஒப்பந்த நியதிகட்கேற்ப வசதிகள் வழங்கப்படாமை.

6. புதிய உடன் படிக்கைகளில் கையொப்பமிட நிர்பந்தித்தல்.

7. வேலைகளால் ஏற்படும் பாதிப்புகட்கு, காயங்கட்கு நட்ட ஈடு வழங்க மறுத்தல்.

8. காயமேற்படின் நட்டஈடு வழங்குவதில் தாமதமான போக்கு.

9. கொழும்பு முகவர்களினுல் ஒப்புக்கொள்ளப்பட்ட சம்பள முறைகளுக்கும், தொழில் வழங்குபவர்கள் வழங்கும் சம்பள முறைக்கும் இடையே உள்ள வேறுபாடு.

இவ்வாறுன பிரச்சினைகள் இத்தொழிலாளிகட்கு ஏற்படுவதற்குரிய காரணங்களாவன.

1. வேலைக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் நல்ல முறையில் தெரிவு செய்யப்படுவதில்லை.

2. புதிய தொழிலுக்குத் தொழிலாளர்கள் தம்மை மாற்றிக் கொள்ள முடியாத நிலை.

3. மொழி தெரியாமை, அந்நாட்டு சட்ட கலாசார கட்டுப்பாடுகள் பற்றிய தெளிவின்மை.

4. மாறுபட்ட காலநிலை அம்சங்கள்.

5. சட்ட ரீதியான பாதுகாப்பின்மை.

6. இலங்கையிலுள்ள முகவர்கள் அளவுக்கு அதிகமாக கட்டணம் அறவிடுதல்.

7. வேறு நாட்டவர்க்குக் கொடுக்கப்படுவதை விட குறைவான சம்பளம் இலங்கைப் பெண்களுக்கு வழங்குதல்.

8. சில தொழில்களில் தெளிவற்ற வேலை நிபந்தனைகள்.

9. ஒப்பந்தம் கையெழுத்திடுவதன் முன் அதனைப் படித்து தெளிவு பெற தொழிலாளர்கட்கு போதிய கால அவகாசம் வழங்கப்படாமை.

10. சில தொழில்களுக்கு முஸ்லிம் தொழிலாளர்களையே வேண்டும் என்று வற்புறுத்துதல்.

இலங்கையில் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்காக வெளியேறுபவர்கள் தொடர்பான சட்டமானது 1985 ஆம் ஆண்டின் இலங்கை வெளிநாட்டுத் தொழில்பணியக 21 ஆம் இலக்கச் சட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்டது. இதன் படி வெளிநாட்டு தொழிகட்கான இலங்கைப் பணியகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் படி வெளிநாட்டில் தொழில் பெற்றுச் செல்பவர்கட்குப் பல பாதுகாப்புக்கள் சட்டப்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட தொழில் முகவர்கட்கூடாக செல்பவர்கட்கே இவ்வாறுன பாதுகாப்புக்கள்கிடைக்கும் ஆகவே இவ்வாறுன தொழில் வாய்ப்புகள் பெற்று செல்பவர்கள் பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்களோடு தொடர்புகளை வைத்துக்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் முகவர்களின் தொழிற்

......கதை

தனர். இலங்கையைச் சேர்ந்த தமிழர் ...... சிங்களவர் ...... இந்தியாவைச் சேர்ந்தோர்...... என பலர் ......

பொலிஸ் உதவியுடன் ரிக்கற் பெற்றேன். பணியாற்றிய வீட்டுக்காரர் நான் கொண்டு சென்ற உடமைகளைக் கூட தர மறுத்து விட்டனர். நான் உடுத்திருந்த உடையுடனே கையில் ஒரு சிறு பணம் கூட இன்றி கொழும்பிற்கு வந்து சேர்ந்தேன்.

இப் பெண்ணுக்கு ஏற்பட்ட இழப்பு அவமானம் துன்பம் தொடர்பாக 'மகளிர் அபிவிருத்தி நிலையம்' இலங்கை வெளிநாட்டுத் தொழில் பணியகத்திற்கு மனு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. □

பாட்டை ஒழுங்கு படுத்தும் இச் சட்டமானது பல நன்மைகளைக் கொண்டுள்ளது. இவை வெளிநாட்டிற்குத் தொழில் பெற்றுச் செல்லும் தொழிலாளர்களது பாதுகாப்பு, நலன் என்பவற்றை உறுதி செய்பவையாகும். முகவர் நிலையத்திற்கு தொழில் வாய்ப்புக்களுக்கான அனுமதி கிடைத்ததும் இப்பணியகத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்படுகிறது. இதன்படி இவ்வனுமதியானது நன்கு ஆராயப்பட்டு தொழிலுக்குரிய நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக அமைந்தாலே அனுமதி வழங்கப்படுகிறது. அனுப்பப்படும் பத்திரங்களும் முடியுமானவரை பரிசீலிக்கப்பட்டு தேவையான விடத்து வேலை நிலைமைகள் பற்றிய சிபார்சுகளும் வழங்கப்படுகிறது.

இம் முகவர் நிலையங்களுடாக வெளிநாடுகட்கு வேலைவாய்ப்புப் பெற்று செல்பவர்களது தொழில் நலன்களைப் பாதுகாக்கக் கூடிய அம்சங்களும் உளது. மேலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரும் முகவர்கள் அதற்கான அனுமதியைப் பெறுவதற்கு முன் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இவ்வாறு அனுமதிக்கு விண்ணப்பிக்கும் ஒரு முகவர் நிலையம் இலங்கை வெளிநாட்டு தொழில் பணியகத்துடன் ஒரு உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும். இதன்படி அவர் தனது முகவர் நிலையத்தினூடாக வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவோர் தொடர்பாக சில பொறுப்புக்களுக்குக் கட்டுப்பட்டவராகிறார். அவர் வெளிநாட்டில் தொழில் வழங்குபவருக்கும் அனுப்பு வருககும் இடையில் வேலை நிபந்தனைகள் தொடர்பாக ஏற்படும் உடன்படிக்கைகளில் கூறப்பட்ட சகல விடயங்களுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். முகவர் ஒருவருக்கு அனுமதி வழங்குவதற்கு அவர் 100,000/= ரூபாய் வங்கி பாதுகாப்புப் பணத்தையும் நம்பிக்கைப் பொறுப்பாக மேலும் 100,000/= ரூபாவையும் கட்டிய பின்பே அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

எந்த நிலைமையிலும் ஒரு முகவரால் அனுப்பப்படும் பெண் வேலை நிலைமைகளினாலோ அன்றி அவரது நலன் சம்பந்தமாகவோ பாதிக்கப்படும் வகையில் நடத்தப்பட்டால் இந்த நபருக்கெதிராக இப் பணியகம் நடவடிக்கை எடுப்பதோடு இப் பணமும் பணியகத்தினால் பயன்படுத்தப்படும்.

இச்சட்டத்தின் பிரகாரம் எந்தவொரு தொழில் பார்ப்பவரும் இவ்வாறான முகவர் நிலையத்தினால் அனுப்பப்பட்டிருந்தால் அவருக்கு ஏதாவது பிரச்சனைகள் ஏற்படுமாயின், அவர் முதலாளிக்கெதிராகவோ அன்றி முகவர் நிலையத்திற்கெதிராகவோ உள்ள குற்றம் குறைகளை இப்பணியகத்தின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும். இப்பணியகம் பலவழிகளினால் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முயற்சிகளை மேற்கொள்ளும்.

இதன்படி தொழிலாளர் நலனுக்காய நிதியொன்றை ஏற்பாடு செய்யவும் இச்சட்டம் வழிவகுக்கின்றது. இதன்படி இப்பணமானது தொழில்பார்ப்பவர்கட்கு பயிற்சி, புனர்வாழ்வு, திருப்பி அனுப்புதல், காப்புறுதி போன்ற நலன்களுக்குப் பயன்படுத்தப்படலாம். இப்பணத்தின் மூலம், பிரச்சாரங்களையும் மேற்கொள்ளலாம். வேலை பார்க்கும் நாடுகளில் வீட்டுப் பணிக்காகச் செல்பவர்கட்கு தொழில் காப்புறுதி இல்லாதவிடத்து அவர்கட்கு காப்புறுதி அளிக்கும் திட்டம் இதில் சிறப்பானதாகும்.

ஆகவே இச்சட்டத்தின் படி மிகக்கூடிய சலுகைகளைப் பெறவிரும்பும் ஒரு தொழிலாளி ஒரு பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையத்தினூடாகவே செல்லவேண்டும். □

**வெளி நாட்டு தொழில் வாய்ப்புக்களால் பெண்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. தொழில் நலன்கள் பேணப்படுவதில்லை. வேலை நிபந்தனைகள் விதிக்கப்படுவதுமில்லை. அவை சரியான முறையில் பின்பற்றப்படுவதுமில்லை. ஓய்வின்றி 12 மணித்தியாலங்களுக்கு மேல் தமது உழைப்பை வழங்கும் பெண்கள் பெறும் கூலி ரூபா 3400/– வரை தான். தொழில் வழங்கும் நிறுவனங்கள், ஏஜன்சிகள் தொழில் திணைக்கள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு போன்றன இவற்றைக் கவனத்திற் கொள்ளுமா?**

மேரிகியூரி 19 வயது கன்னியாக இருந்தபோது ஒருவரது வீட்டில் 10 வயதுக் குழந்தையைப் பராமரிக்கும் வேலையில் இருந்தார். கிறிஸ்மஸ் விடுமுறைக்கு அந்தச் செல்வந்தரின் மூத்தமகன் வந்திருந்தான். மேரிகியூரியின் மேல் காதல் கொண்டான். அவளையே திருமணம் செய்தும் கொள்ள ஆசைப்பட்டான். விஷயம் செல்வந்தரான தந்தைக்கு எட்டியது. ஒரு அரைக்காசுக்குக்கூட வக்கில்லாத வேலைக்காரியையா மணக்கப் போகிருய் என்று ஆத்திரப்பட்டார். செய்தி கியூரியின் செவிகளில் விழுந்தது. வைராக்கியம் கொண்டாள். திருமண நினைவை நீக்கிவிட்டு பரிசுக்குச் சென்ருள். விஞ்ஞானத்திற்குத் தன்னை அர்ப்பணித்தாள். பின்னுல் ''ரேடியோ கதிர் வீச்சு'' பற்றிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கென நோபல் பரிசைப் பெற்ருள்.

மகளிர்க்கென சிறப் பாகத் தமிழ் இதழ்கள் 1883 ஆம் ஆண்டிலிருந்து வெளிவரத் தொடங்கின. ''சுகுண போதினி'' என்னும் இதழ் மங்கையர்க்கென தமிழில் வந்த முதல் இதழ்.

# அஞ்சறைப்பெட்டி

இதுவரை தமிழ்த்தாய் எத்தனையோ கல்விமான்களையும் பேராசிரியர்களையும் ஈன்ற போதும் அவளுக்கென இதுவரை தமிழ் இதழியல் வரலாறு என்ற ஒன்றுதனியாக எழுதப்படவில்லை. இந்திய இதழியல் வரலாறுகளிலும் தமிழ் இதழ்கள் பற்றி அதிகம் இல்லை. இதழியல் வரலாறுகளைத் தமிழில் எழுதியவர்களும் ஆங்கில வரலாறுகளை அடியொற்றிச் சென்ருர்களே அல்லாது தாங்களாக எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

ஆண் குழந்தைகளைக் காட்டிலும் பெண் குழந்தைகளுக்கு அதிக அளவு கேட்கும் சக்தி இருக்கிறது. ஆண்களின் நரம்பு மண்டலத்தில் சில நரம்புகளின் வளர்ச்சி குன்றி விடுவதால் கேட்கும் உணர்வு குறைந்து விடுகிறது. பெண்களுக்கு இந்த வளர்ச்சி அதிகமாக இருப்பதால் தொடு உணர்ச்சி நுகர்வுணர்ச்சி மற்றும் கேட்கும் உணர்ச்சிகள் அதிகமாக அமைந்து விடுகின்றன, என்று கூறுகின்ருர்கள். மேற்கு ஜேர்மனி பிராங்க் பார்ட் பல்கலைக்கழக டாக்டர்கள்.

பணக்காரன் வீட்டிலிருக்கும் வேலைக்காரி போன்று நீங்கள் உலகில் வாழ்ந்திருங்கள். எஜமானுடைய குழந்தைகளையும் வீடு வாசல்களையும் தன்னுடையவைகள் என வேலைக்காரி கருதுகிருள். ஆனுல் தன் சொந்தவீடு வேறு எங்கேயோ இருப்பதை அவள் மறந்து விடுவதில்லை. ஆகவே பெண்கள் கருமத்தில் கண்ணுயிருக்க வேண்டும். தன் நிலையையும் உணரவேண்டும்.

# உள்ளக் கதவை மெள்ளத் திறவுங்கள்



1. நான் உயர் கல்வி பரீட்சையில் சித்தியடைந்து தற்போது வெளிவாரியாக பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றேன். தற்போது எனக்கு திருமணப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. ஆனால் எனக்குத் திருமணமான ஆடவர் ஒருவருடன் ஏற்பட்ட உறவு இறுக்கமடைந்து வருகிறது. என்னை வெளிநாட்டிற்குக் கூட்டிச் செல்வதாக வற்புறுத்துகின்றார், இதற்கு நான் என்ன செய்யலாம்.

எஸ். சி.

நீங்கள் படித்துக் கொண்டு இருக்கின்றீர்கள், திருமணப் பேச்சுக்களும் நடைபெறுகின்றன. நல்ல தொரு எதிர்காலம் தெரிகிறது. எதற்காக திருமணமான ஓர் ஆடவரிடம் சிக்க வேண்டும். வெளிநாடு செல்லும் மோகத்தினால் வாழ்க்கையை வீணடிக்க வேண்டாம். இன்னொரு பெண்ணின் வாழ்வைப் பாழாக்கிய குற்றமும் ஏற்படும். ஆகவே தேவையில்லாத சிக்கலைத் தவிர்க்குக.

2. எனக்கு வயது 26. திருமணம் நிச்சயமாகி விட்டது. மாப்பிள்ளை கனடாவில். அவரை இதுவரை நான் பார்த்ததே இல்லை. பெரிய சீதனத்துடன் என்னை கனடாவுக்கு அனுப்புவதற்கு திகதியும் பார்த்தாகிவிட்டது. ஆனால் நான் இன்னொரு வலிபருடன் தான் கனடாவுக்குச் செல்லவேண்டும். அவர்கள் செல்லும் வழியும் களவான வழியே. அப்படி அவருடன் சேர்ந்து போவதை என் மனம் விரும்பவில்லை. ஏனோ பயமாகவும் இருக்கின்றது. இதற்கு நான் என்ன செய்யலாம்.

பொ. சி.

வெளிநாட்டு மாப்பிள்ளை வேண்டாம் என்று நீங்கள் சொல்லியிருக்க வேண்டும். பெரிய சீதனத்துடன் நீங்கள் அங்கு சென்று வாழ வேண்டுமா? அந்தப் பணத்தைக் கொண்டு இங்கு நல்ல பையனைத் திருமணம் செய்து வாழலாம். இப்படி வேறு ஆடவர்களுடன் சென்ற பெண்கள் சீரழிந்ததாகவும், குடும்பத்தில் வீண் சந்தேகங்கள் உருவாகி குடும்பம் குலைந்ததாகவும் செய்திகள் வருகின்றன. எனவே துணிந்து வெளிநாட்டு மாப்பிள்ளை வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள்.

3. எனக்கு வயது 39. இன்னும் திருமணமாகவில்லை. என் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் வீணடிக்கப்பட்டு விட்டன. இத்தனைக்கும் சீதனம் ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை. ஏனோ திருமணம் பல பேசியும் கைகூடவில்லை. தற்போது விவாகரத்துச் செய்த மூன்று பிள்ளைகளுக்கு தந்தையான 45 வயதுடைய ஒருவரை திருமணம் பேசுகின்றார்கள் நான் என்ன செய்யலாம்.


- சி. பா. -

பொதுவாக பெண்களுக்கு மாதவிலக்கு 45 வரை இருக்கும். அதுவரை திருமணம் செய்ய தங்களுக்கு தகுதியுண்டு. தங்கள் உள் உணர்வுகள் திருமணத்திற்கு தயாராக இருந்தால் திருமணம் செய்யலாம். ஆனால் விவாகரத்து செய்த ஒருவரைத் திருமணம் செய்யும் போது அவரை பற்றி நன்றாக விசாரித்து அறிந்த பின் செய்யவும்.

# கோலங்கள்

இக்கோலம் தீபக் கோலமாகும். இதனை தீபாவளிக்குப் போட மிகவும் சிறப்பாக இருக்கும். இக் கோலத்தினை மாதூவி, அல்லது மாகரைத்துப் போட்டுக் கொள்ளலாம். வர்ணம் சேர்த்துப் போடலாம்.

வர்ணம் சேர்ப்பதானால் விளக்குகளுக்கு மெல்லிய மஞ்சளும் கடும் மஞ்சளுமாக கோடு போட்ட பகுதிகளை நிரப்பவும். விளக்குகளின் அடிப்பாகத்திற்கு கடும் மஞ்சள் வரத்தக்கதாகப் போட்டீர்களானால் அழகாக இருக்கும். பின்னர், சுடருக்கு செவ்விளநீர் நிறம் கொடுக்கவும். அதன் பிறகு ஒவ்வொரு விளக்கிற்கும் உள்ள இடை வெளிகளை பச்சை நிறம் அல்லது நீலநிறமாக கொடுத்தால் அழகாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கும்.



கோலம் போடும் போது முதலில் 18 புள்ளிகள் நேராக வைத்து அதனை 10 நிரைக்குப் போட்டுக் கொள்ளவும். பின்னர் இரண்டு பக்கமும் ஒவ்வொரு புள்ளியை விட்டு 16 புள்ளிகள் வைத்து அப்படியே இரண்டு பக்கமும் ஒவ்வொரு புள்ளியைக் குறைத்து 10 புள்ளிகள் வந்ததும் நிறுத்தவும், இதேபோன்று மேல்பக்கமும் புள்ளியைக் குறைத்து 10 புள்ளிகள் வந்ததும் படத்தில் காட்டியிருப்பதுபோல் தொடுத்துக் கொள்ளவும்.

திருமதி நா. சோமசுந்தரக்குருக்கள்.

குறிப்பு : வர்ணம் சேர்ப்பதற்கு கோழிச்சாயப் பொடியை பால் பிழிந்தெடுத்த தேங்காய்ப்பூவிற்குள் போட்டுக் கலந்து எடுத்துக் கொள்ளலாம். கோதுமைமா பசையை கீழே பூசி அதற்கு மேல் வர்ணம் சேர்த்த தேங்காய்ப்பூவினை வைத்து அமத்தி விட்டால் காற்றுக்கு எடுபடாது.

# பெண்களும் சுயதொழில் வேலைவாய்ப்பும்

"பொருளாதாரத்திலே பொருள்தானு தாரமின்று
இருவர் உழைத்தாலே இந் நாளில் பசிதீரும்" என்று ஒரு கவிஞர் பாடியுள்ளார். இன்றைய காலகட்டத்தில் பொருட்களின் ஏற்றத்தால் போதிய வருமானம் இன்றி எத்தனையோ குடும்பங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றன. நவநாகரிக உலகில் மக்களின் அன்றாட தேவைகளும் வாழ்க்கையின் நிறைவுகளும் அதிகரித்துக்கொண்டு போவதால் ஒரு குடும்பத்திற்கு கணவன், மனைவி இருவரினதும் உழைப்பும் மிகவும் அவசியமே. கட்டணம் இல்லாமல் சூரியனைப் பார்க்கலாம், இயற்கைக் காற்றை அனுபவிக்கலாம், சந்திரனை ரசிக்கலாம். வேறெதையும் நாமின்று இலவசமாகப் பெறமுடியாது.

ஒரு குடும்பப் பெண் வீட்டு வேலைகளையும் செம்மையாகச் செய்துகொண்டு ஓய்வு நேரங்களில் தையல், மனையியல், பூவேலை போன்ற பற்பல வேலைகளைச் செய்து வருமானம் பெறலாம். இப்பொழுது கிராமங்கள், நகரங்கள் தோறும் அரசாங்கங்கள், மற்றும் ஸ்தாபனங்கள் இவ்வாறான பயிற்சி நெறிகளை இலவசமாக கற்பிக்கிறது. நடமாடும் பெண்கள் பயிற்சி நிலையங்களும் உள்ளன. உதாரணத்துக்கு பன்னவேலை, சிகை அலங்காரம் போன்றவைகளாலும் வருமானம் பெற வாய்ப்புள்ளது.

குடும்பப் பெண்களே நன்றாக யோசித்துப் பாருங்கள். நீங்களோர் ஆபீஸில்தான் வேலைபார்த்து உழைக்கவேண்டுமா! பெரும்பாலான குடும்பத்தலைவிகள் தாங்கள் வேலைக்குப் போகமுடியாத நிலைமையை குறித்து தாங்கள் அதிஷ்டம் கெட்டவர்களாக மனதில் புழுங்கிக்கொண்டு இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆபீஸில் வேலைபார்க்கும் பெண்களுக்கு, எத்தனையோ விதமான பிரச்சினைகள் ஏற்படலாம், சில வேலைத்தளங்களிலும் வேலைபார்க்கும் மேலகாரிகளின் நடத்தை சரியில்லாமல் இருக்கலாம். இன்னும் மேலதிகாரிகளின் அதிகாரத்துக்குட்பட்டவராக இருக்க வேண்டும். மற்றும் வேலைத்தளத்தில் வேலைசெய்பவர்களுடன் நீங்கள் சிரித்து பேசி பழகுவீர்கள், அது எல்லாக் கணவன்மார்களுக்கும் ரசிக்கக்கூடிய விஷயமாக இருக்காது. சிலர் சந்தேகப்பட்டு அதனால் வீட்டில் பிணக்குகள் உருவாகலாம். எனவே நீங்கள் குடும்பப்பெண் என்ற ஸ்தானத்தை அடையுமுன் இந்த சுயதொழிலுக்குரிய பாடங்கள் சிலவற்றைக் கற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள். இதனால் நீங்கள் வீட்டில் வேலைகளை முடித்து ஓய்வாக இருக்கும் நேரங்களில் அயல்வீடு, எதிர் வீட்டாருடன் வீண்பேச்சுப்பேசி வம்பில் மாட்டிக்கொள்ளாது பொன்னான நேரத்தையும் வீணாக்காது இப்படியான வேலைகளில் நேரத்தைச் செலவிடலாம். சுயதொழில் செய்வோருக்கு எவருடைய அதிகாரமோ, காலவரையீடோ கிடையாது. சளைக்காமல் சுதந்திரமாக இயங்கலாம்.

பெண்களே சிந்தித்துச் செயலாற்றுங்கள்

ஆக்கம்: சியாமளா. ச


ஈழத் தமிழகமே — உனது
வரலாற்றுத் தவறுகளைத் தொடராதே—
உரத்து ஒலிக்கும்
மலையகத் தமிழனின் குரலைக்கேள்,

வாங்கிப் படியுங்கள்

'கொழுந்து'

(இரு திங்கள் இதழ்)

விலை: 5/- ஆசிரியர்: அந்தனிஜீவா

57, மகிந்த பிளேஸ்,
கொழும்பு - 6

# எங்கெங்கு காணினும்
# சக்தியடா!

செம்பியன் செல்வன்

உச்சிப் பொழுது தாண்டிய வேளை, வெறுமையின் தகிப்பிலும், கோடையின் வெம்மையிலும் அவரால் அந்த நாற்சார வீட்டினுள்ளும் பூனைத் தூக்கம்கூடப் போட முடியவில்லை. வாழ்க்கைக் கரம் பற்றியவள் பூவும் பொட்டுமாக சுவரில் படமாக புன்சிரிபபுடன் அவரை நலம் விசாரிக்க, அவர்களின் தாம்பத்திய உறவில் கிளைவிட்டுப் படர்ந்த மலர்கள்... வெளிநாடுகளில் குழந்தை குட்டிகளுடன்... அவர்களும் வர்ணப் புகைப்படங்களாக... இவர் அவர்கள் வருகைக்காக... வந்தவுடன் அவர்கள் கையில் ஒப்படைப்பதற்கான சொத்து பத்துக்களுடன் காத்திருக்கிறார். காத்திருத்தலே தவமாக!

படுக்கையிலிருந்து 'விருட்'டென எழுகிறார். மூலையில் கருங்காலி வேலைப்பாடுகளுடன், காணப்படும் பெட்டகத்தைத் திறந்ததும் பொட்டுப் பூச்சிகள் பொல பொலவென உதிர, பதறிப் போய்விடுகிறார்.

பெட்டகம் முழுவதும் துணிமணிகளாக... பெரியவன் சின்னவனாக இருக்கும்போது போட்ட 'பிளனல்' சட்டை, மலருக்கு பாவாடை வேண்டும் மென்று கேட்டுத் தொந்தரவு செய்தபோது, இணைக்கூறையை வெட்டித் தைத்த பாவாடை... சின்னவனின் பட்டுச்சட்டை...

பூச்சிகள் நன்றாகவே அரித்திருக்கின்றன. அடியில் கைவிட்டு அந்தச் சேலையை எடுக்கிறார். மனைவிக்கு ஆசையாக வாங்கிக்கொடுத்த கூறைச் சேலை —

சாயம் மங்கி, வெள்ளிக்கரை பச்சையேந்தி, புட்டாக்களில் சரிகை திரிந்து...

நல்லவேளை சேலை முற்றாக அழியவில்லை. அவர் அதனை மார்போடு அணைத்துக் கொண்டார்.

'சாமி... சாமி...' யாரோ பின்வாசலால் அழைக்கிறார்கள். ''ஆரது இந்த வேளையில்'

வெளியே ஒரு பெண்ணும், ஒரு சிறுமியும் ... அந்தப் பகுதிக்கே புதியவர்களாக – ''என்ன'

''ஒரு புடவை இருந்தாக் கொடுசாமி... இவள் போன வாரம்தான் பெருசாச்சி சாமி. கட்டிக்க ஒரு துணி கொடுசாமி...',

'இங்கு ஏது சேலை' என்று கூற வாயெடுத்தவர், ஏதோ நினைவில் சாயந்தரமா வா ஏதும் துணி தருகிறேன்.'' என்கிறார். அவர்கள் கும்பிடு போட்டுவிட்டு போனார்கள்.

மீண்டும் உள்ளே வந்து துடைகிறார். மனைவியின் கூறைச்சேலையை தட்டி உதறி வெளியே கிணற்றடிக் கொடியில் காயப்போடுகிறார்.

## 2

அவரின் தூக்கத்தை 'சாமி!' என்ற குரல் கலைக்கிறது. விழித்தபோது மஞ்சள் வெயில் கிழக்குக் கூரையில் துணி பரப்பியிருக்கிறது. குரலிலிருந்து விசயத்தைப் புரிந்துகொண்டு ஏற்கனவே எடுத்துவைத்த 'பழசுபத்துக்களுடன் பின் வாசலைத் திறக்கிறார்.

அவர் உச்சிமயிர் பற்றி எரிவதென...

அச் சிறுமி அவர் காயப்போட்டிருந்த மனைவியின் கூறையை உடுத்து ...

'நீ நல்லாயிருக்கணும் சாமி...' என்ற குரலை மழுங்கடிக்க, தான் என்ன செய்கிறோம் என அறியாது...

அச் சிறுமியின் உடலிலிருந்து கூறையை உருவி துச்சாதனனாகி...
சிறுமி அரை நிமிர்வாணமாக...

பெரியவன் ஜீக்குளித்தவனாகி... ஒரு குழந்தையின் மானத்தை இப்படிக் காற்றிலே பறக்கவிட்டியே சாமி ... நாளைக்கு இந்தப் பிள்ளை எப்படி நாலுபேர் முன்னாலை தலைநிமிர்ந்து நடக்கும் சாமி... சாமி... ஏழை சாபம் பொல்லாது சாமி... நாளைக்கு நீயும் தலை குனிந்து தான் சாமி நாலுபேர் நடுவே பயணமாகப் போருய்...... ' — அவர் சிறுமியை இழுத்த வாறு வெளியேறுகிருன்.

## 3

அடுத்தநாட் காலை அவர் நீண்ட நேரம் வளவால் வரவில்லை. தகவல் அறிந்து ஊர் பரபரப்புக் கொள்கிறது. பிள்ளைகளுக்கு அறிவிக்க நேரமில்லை. நேற்று எந்த நேரம் சீவன் போச்சுதோ? ஊர் கூடி அவரது இறுதி யாத்திரைக்கு ஏற்பாடு செய்கிறது.

யாரோ சவப்பெட்டிக்குச் சொல்லி எடுத்துவருகிருர்கள்.

அவரைக் குளிப்பாட்டி பெட்டிக்குள் இறக்கியபோது...

அவரது தலை இறங்க மறுக்கிறது. ஓரங்குலம் பெட்டி சிறிதாகி...

'பெட்டி மாத்த வேணும் ..' என்ற குரல் எழும்ப முயன்றபோது, அதனை அடக்கி அதொண்டுமில்லை ... இப்ப சரியாச்சு ...' என்ற குரல் எழுகிறது.

பஞ்சமர்களில் ஒருவன் சற்று அவர் தலையை மடக்கி. அவசர அவசரமாக மாலை களால் கழுத்தை மறைத்து...

அவர் ஊர்வலம் புறப்பட்டபோது, அந்தக் கூட்டத்திடையே அந்தத் தாயும் மகளும் தென்பட்டு மறைந்தனர்.

---

*முதல் மனைவியை இழந்த கணவனுக்கு இரண்டாம் திரு மணம் செய்வதை சுடுகாட்டில் வைத்து நடத்துகின்றுர்கள். அந்தமான் தீவு பழங்குடி மக்கள். இறந்து போன முதல் மனைவியின் ஆசியை முழுவதுமாகப் பெறுவதற்காகத்தானும் அவள் தன் கணவன் மீண்டும் இல்லறத்தில் ஈடுபட ஆசியை வழங்குகிருளாம்.*



# RAJINI:
# A MARTYR'S DEATH

I do not know how theologians define a martyr but, as a layman, I would say that the word denotes a person who is prepared to literally sacrifice his or her life and does lay down his or her life for deeply held beliefs and convictions. These beliefs and convictions need not necessarily be religious in a conventional or formal sense.

The question then arises, what did Rajini believe in? Nothing human was alien to her. She was deeply committed in her heart to human emancipation and human dignity. Anything that tended to rob humanity of its inherent dignity and deprive it of freedom, she considered intolerable. Permitting another person's humanity and freedom to be violated or keeping silent when this happened, was tantamount to losing one's own humanity. That is why unlike cowardly intellectuals who chose silence to death when it came to a crunch she chose to speak up and be counted whenever and wherever she encountered injustice and oppression though she knew full well that by doing so she was putting her life in danger.

**And when I rise**
**Again from the dead**
**Let me, I pray,**
**Be accompanied**
**By the** *spirit of man.*
(emphasis minen)
— *Hugh Macdiarmid*
**I Heard Christ Sing**

Like John Donne, Rajini believed that

**No man / woman is an island.**
**Ask not for whom the bell tolls,**
**It tolls for thee.**

Naturally, establishments of all kinds felt uncomfortable when

Rajini was around because she would start probing beneath the surface, so someone decided she had to be silenced, like others before her.

The bullet would answer the whiplashing pen and tongue.

And the heinous crime was committed on 2nd September 1989 when she was returning home after attending to official work.

I mentioned above that others before her had been silenced to use the euphemism in vogue. So what was special about Rajini that we should be commemorating her life and work through a series of Commemoration meetings and the publication of a Commemoration volume?

**It's certainly not the fact that she was a doctor, and an intellectual. There have been doctors and doctors, intellectuals and intellectuals, some of them perhaps more accomplished than Rajini in their own specialised field. But the world and the community are hardly likely to mourn them when they pass away or commemorate them after their death.**

Rajini was a multi — faceted but well – integrated and dynamic personality who believed in savouring life to the full. Unlike some revolutionaries who love humanity in the abstract but can't stand the sweat and stink of concrete human beings she deeply cared for other human beings Her concern and compassion transcended all barriers of caste, creed, race, status and gender. Her dedication to work, her social activism and commitment and her thoroughgoing radicalism were not merecerebral poses. They were a natural extension of her central beliefs about life and humanity. And these beliefs were rooted in the Christianity into which she was born and brought up: that's why I have chosen Macdiarmid's lines as the epigraph. However, as far as I know, she never aggressively proclaimed her Christianity or try to make converts. Like Macdiarmid Rajini rejected 'half way measures and craven reconciliations'

The senseless manner in which she was gunned down in the prime of her life, before the bloom and idealism of youth had faded, has deprived Jaffna University of a dedicated and distinguished intellectual and the community of a highly sensitive conscience which was justifiably and thoroughly revolted by the murder and mayhem rampant now.

The palmyra is an apt symbol of Jaffna. It symbolises Rajini even more aptly.

The palmyra may be broken but no one can prevent the sprouting up of a palmyra grove.

Palmyras grow not singly but in groves.

**A. J. Canagaratna**

*(An expanded version of a talk given at the Dr. Rajini Thiranagama Commemoration meeting held on 2 nd October 1989 at Kailasapathy Auditorium, University of Jaffna.)*

ஆய்வு – 2

# யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப் பாரம்பரியம்

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம்
(குறமகள்)

போத்துக்கேயரின் பின் வந்த ஒல்லாந்தருக்கு வர்த்தக நோக்கமே பிரதான மாக இருந்தது. எனினும் தமது 'சீர் திருத்திய' கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புகின்ற முயற்சியும் மேற் கொள்ளப்பட்டது. கத்தோலிக்கரையும் இந்துக்களையும் கிறிஸ்தவராக்கும் முயற்சிக்குப் போத்துக்கேயத் தேவாலயங்களையும் பாடசாலைகளையும் உபயோகித்ததோடு பல புதிய நிறுவனங்களையும் ஒல்லாந்தர் அமைத்தனர்.

போத்துக்கேயர் கல்வியின் பொறுப்பை சமயக் குழுக்களிடம் விட்டிருந்த தற்கு மாருக ஒல்லாந்த அரசாங்கம் கல்வித்துறையில் நேரடியாகவே ஈடுபட்டது. பாடசாலைச் சபை அமைக்கப்பட்டுப் பரீட்சைகள் வைக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இவை பெண்பிள்ளைகளைப் பாடசாலைக்குச் செல்வதற்கான தூண்டுதல்களாகவோ நிர்ப்பந்தமாக்வோ அமைந்தன.

கி.பி. 1690 இல் நல்லூரில் ஒரு உயர்கல்வி நிலையம் அமைக்கப்பட்டது. இச் செமினறியில் டச்சு, தமிழ் மொழிகள் கற்பிக்கப்பட்டன. "தீங்கு விளைவிக்காத" கொன்றை வேந்தன், ஆத்திசூடி, திவாகரம் முதலிய நூல்கள் கற்பிக்கப்பட்டன. பேரும் புகழும் பெற்ற குடும்பங்களிலிருந்து சேர்க்கப்பட்ட மாணவர் முழுமையறிவு பெற்ற குருமாராகவும், ஆசிரியராகவும் வெளியேறினர். அக்கால யாழ்ப்பாண சமுதாயத்தில் சாதிப்பாகுபாடு நன்ருகவே வேரூன்றியிருந்த காரணத்தால் அதற்த ஏற்பப் பள்ளி விடுதியிலேயே உணவும் தங்குமிடமும் வெவ்வேருக அமைக்கப்பட்டன. ஆனல் பெண்கள் இங்கே கல்வி பெறவில்லை.

பெண் கல்வியைப் பொறுத்தவரை பெண்களை வீட்டைவிட்டுக் கிளப்புவதே கஷ்டமாக இருந்தது. தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்ற முதலாவது மதகுருவான பல்டேயுஸ் சுவாமிகள் (Baldeus) தமது இலங்கை வர்ணனை என்னும் நூலில் (Description de Ceylon) யாழ்ப்பாண மக்கள் பற்றிக் குறிப்பிடும் போது

"மேல் சாதியினர் கீழ் சாதியினரை வெகு மேட்டிமையோடு அடக்கி நடத்தி வருகின்ருர்கள். இப்படியே ஆண்களெல்லாம் பெண்களை மிகத் தாழ்வாக மதித்து நடத்துகிருர்கள். பெண்கள் ஆண்களோடு இருந்து உணவு உண்பதற்குக் கூட அனுமதிக்கப்படாது தனியே இருந்து உணவருந்த விடப்படுவார்கள்."

எனக் கூறியுள்ளார். பெண்களின் சமூக நிலை இவ்வாறு இருந்தமை பிற்காலத்தில் வேறு சமய குருமார்களாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டாயக் கல்வி முறையை ஒல்லாந்தர் புகுத்தியிருந்த போதும் சமுதாயம் பெண்கல்விக்கு அவ்வளவு ஒத்துழைப்புக் கொடுத்ததில்லை. இதனை வண. ஜான்ஸ் பாதிரியார் தமது இளமைக் காலத்திலிருதே அவதானித்து வந்துள்ளார்.

வண. ஜான்ஸ் பாதிரியார் தமது 1757 ஆம் ஆண்டுக்குரிய யாழ்ப்பாணப் பாடசாலை அறிக்கையில் தலைமைப் பதவிகள் வகிக்கின்ற பெயர் பெற்று விளங்குகின்ற சுதேசிகளது பெண்பிள்ளைகள் பாடசாலைகளுக்கோ, பரீட்சைகளுக்கோ

சமூகம் அளிப்பது கிடையாது. அது மாத்திரமல்ல தேவாலயங்களில் நடைபெறுகின்ற ஞானஸ்ஞானம் திருமணம் போன்றவற்றிற்குக் கூட சமூகம் அளிப்பதில்லை. பதிலாக அவர்களது அடிமைச் சிறுமிகள் அவர்களது பெயரில் அனுப்பிவைக்கப்பட்டு பங்கு கொள்ளச் செய்யப்படுவார்கள் எனக் கூறியுள்ளார்.

மேலும் டாக்டர் மெல்ஹோ இதனைக் கண்டும் காணுதவர் போல நடந்துகொண்டார் எனவும் ஆசிரியர்களுக்குக் கைலஞ்சம் கொடுக்க முடியாத ஏழைச் சிறுமிகளே பாடசாலைக்கு ஒழுங்காக வந்துள்ளனர் எனவும் கூறினர்.

கட்டாயக் கல்வி புகுத்தப்பட்டதினுல் எட்டு வயது வரை மாத்திரம் பெண்கள் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார்கள். ஆனல் 10 வயது வரை கல்வி அளிக்கப்பட வேண்டுமெனப் பெற்ருேர் கேட்டுக் கொள்ளப்பட்டனர். 'சிறுவர்களதும் மற்றவர்களதும் சிறுமைத்தனமான நடத்தைகளினுல் மாணவிகள் சீரழிந்து விடாமல் இருப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டுமெனப் பாடசாலைச் சபைக்கு அரசினுல் திட்டவட்டமான அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது. அதுனுல் 10 வயதில் சிறுமியர் பாடசாலையை விட்டு நீங்க வேண்டியிருந்தது. அரசாங்கமும் பெண்களுக்கு வரக் கூடிய ஆபத்துகளைக் கண்டு அவர்களின் உயர் கல்வி பற்றி நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. பெற்ருேரும் உயர் கல்வியை ஆதரிக்கவில்லை.

ஒரு கிறிஸ்தவன் விவாகம் செய்யப் போகும் ஒரு பெண்ணுக்கு ஞானஸ்ஞானத்தோடு குறித்தளவு தோத்திரப் பாடல்களைப் பாடவும் வினு விடைகளை விளக்கவும் சமயப் பிரமாணங்களை அறியவும் வேண்டும் என்பதற்கான கல்வி வீட்டிலோ தேவாலயங்களிலோ வழங்கப்பட்டது.

சைவப் பெண்களை மணக்கும் கிறிஸ்தவ ஆடவருக்கு மரண தண்டனை வழங்கும் வழக்கம் ஆரம்ப காலத்தில் காணப்பட்டது. பிற்காலத்தில் சமய இறுக்கம் தளர்ந்து சகிப்புத் தன்மை காணப்பட்டது. இதற்கு சன்ருக யாழ்ப்பாணம், பெருமாள் கோயில் கட்டப்பட்ட போது குருமார் பல முறை முறைப்பாடு செய்தும் அரசு வாளாவிருந்தது. வண்ணுர்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்டிய செட்டியார் 1782 இல் கம்மாந்தோரின் உத்தரவு பெற்றே கட்டினுர். இது 1791 இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவை ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் காணப்பட்ட சமய நெகிழ்ச்சிக்கு உதாரணமாக அமையும்.

ஒல்லாந்தப் போர் வீரர் சுதேசப் பெண்களைக் கிறிஸ்தவராக்கி விவாகம் செய்தனர். உயர்குடி வேளாளருக்கு உத்தியோகங்கள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணச் சரித்திரம் மயில் வாகனப் புலவரால் எழுதுவிக்கப்பட்டது. இங்ஙனம் சமூக ரீதியாகவும் சேவை நடைபெற்றது.

கோவில் பற்று பாடசாலைகளைத் தவிர அனுதைப் பாடசாலைகளும் தனியார் பாடசாலைகளும் காணப்பட்டன. தனியார் பாடசாலைகளில் போத்துக்கேய, ஒல்லாந்த சிறுவர், சிறுமியர் அதிகமாக சேர்க்கப்பட்டிருந்தனர். அனுதைப் பாடசாலைகளில் போரில் உயிரிழந்த போத்துக்கேயரின் சிறுவர் சிறுமியரும் சுதேசப் பெண்களும் காணப்பட்டனர். இங்கே வாசிப்பு, எழுத்து, எண் என்பன கற்பிக்கப்பட்டன. சமயம் பிரதானமானது. இவற்றை விடப் பிரத்தியேகமாகச் சிறுவருக்கு ஒரு தொழிலும் சிறுமியருக்குத் தையல், பின்னல், கைப்பணி போன்றவையும் கற்பிக்கப்பட்டன.

அனுதைப் பாடசாலைகளில் கல்வி பயில்வோர் தமது 18 வயதில் பள்ளியை விட்டு நீங்க வேண்டும். அப்போது ஆண்களுக்கு அவர்கள் கற்ற தொழிலுக்கேற்ப தொழில் வாய்ப்பும் பெண்களுக்கு விவாகம் செய்யும் காலத்தில் 60 றிக்ஸ் டொலரும் அன்பளிப்பாக அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. கி.பி. 1699 இல் யாழ் மாவட்டத்திற்குப் பொறுப்பாயிருந்த அட்றியன் டி மேஜ் எனும்

பாதிரியார் வீகாமர் (Weekamar) எனப்படும் இத்தகைய பாடசாலை ஒன்றில் வசித்த ஓயெட்டா எனும் பெண் ஒருத்தியை விவாகம் செய்தனர். இது அனாதைப் பெண்களின் வாழ்விற்கு வழி காட்டியமை போலாகும். இவ்வகை அனாதைப் பாடசாலைகளில் யாழ்ப்பாணத்தில் கி.பி. 1734 இல் 47 ஆண்களும் 21 பெண்களுமாக 68 பேர் இருந்தனர். கி.பி. 1739 இல் 52 ஆண்களும் 47 பெண்களுமாகத் 99 பேர் இருந்தனர்.

தனியார் பாடசாலைகளில் 1734 இல் 33 ஆண்களும் 27 பெண்களுமாக 60 பேரும், 1839 இல் 31 ஆண்களும் 34 பெண்களுமாக 66 பேரும் கல்வி கற்றனர். கோவில் பற்று பாடசாலைகளின் ஆண் பெண் விபரம் பெற முடியாது போய் விடினும் 34 பாடசாலைகளிலும் ஏறக்குறைய 20000 மாணவர் கல்வி கற்ற விபரம் கிடைக்கின்றது. 1778 இல் யாழ் மாவட்டத்தில் 46 ஒல்லாந்தப் பாடசாலைகள் இருந்தன. பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வாசிப்பும் எழுத்தும் கற்பிக்கும் முறை சொல்லிக் கொடுக்கப்பட்டது. பெண்களும் அவ்வாறன கல்வி பெற வேண்டும் எனக் கூறப்பட்டது.

ஒல்லாந்தர் பெண் கல்விக்கெனச் சிறப்பாக எதையும் செய்யாது விடினும் மத மாற்றம் மூலமும் கட்டாயக் கல்வி மூலமும் வீட்டில் அடைந்து கிடந்த பெண்ணை வெளியே கொண்டு வந்து சமூகப் பழக்கங்கள் ஊட்டி முன்னேற்றம் அடையச் செய்தனர். பெண்களுள் நடுத்தர வகுப்பினர் கணிசமான நியமக் கல்வியைப் பெற்றிருக்க வேண்டும். பிற்காலத்தில் வந்த பாதிரிமார் இதனை மறுத்தாலும் ஆரம்ப கல்வியைச் சிறிதளவாயினும் பெற்றிருக்க முடியும் என்பது ஒல்லாந்தக் குருமாரின் அறிக்கைகளிலிருந்து பெறக் கூடியதாக இருக்கின்றது.

---

*உடலியல்படி பெண் ஆணிலிருந்து வேறு படுகிறாளே தவிர ஆற்றலிலோ அறிவிலோ ஆளுமையிலோ அவள் சற்றும் குறைந்தவள் அல்லள். தன் வாழ்க்கையிலும் உலக வரலாற்றிலும் பல்வேறு காலங்களில் - தற்காலத்தில் கூட அவள் தன் திறமைகளை வெளிக் காட்டி தலைமை தாங்கி நடத்த முடியும் என்று நிலை நிறுத்திக் காட்டியுள்ளாள். — காட்டி வருகிறாள். இருந்தும் அவள் வெற்றிகள் திறமைகள்—முழுமையான பாராட்டுதலைப் பெறுவதுமில்லை திறமைகளை வெளிக்காட்டுவதற்கான உரிமைகள் தரப்படுவதுமில்லை.*

— எல்லார்வீ

*'கன்னிகாதானம்' என்றால் கன்னியொருத்தியை மணமகனுக்குத் தானமாகக் கொடுப்பது. அவள் இன்ப துன்பங்களில் தலையிட அதன் பின் கணவனைத் தவிர யாருக்கும் உரிமையில்லையாம். தானம் கொடுக்க பெண் என்ன ஆடா? மாடா?*

— ஈ. வே. ரா. பெரியார்



## பொறுமையைத்தான் சுமக்கிறன்

அண்டைவீட்டுச் சண்டையும்
  அடுக்களை வாழ்கையும்
கண்டதுதான் என்ன
  கனகம்மா சொல்லடி

மண்டையோட்டு மாயவன் போல்
  கண்டதில, கொண்டதுதான்
இண்டுவரை அடுக்களைதான்
  இரவினிலே இல்லறமாம்

பெண்ணாகப் பிறந்ததில
  பெரும் பயன் ஒண்டுமில்ல
கண்ணாகப் பெத்த மூண்டு
  கரையேறி போயிட்டினம்

உன்னுணை வீட்டினிலே
  உறங்காத வேளைதான்
மண்ணாய்ப் போனவனும்
  மாய்கிறான் குடியினிலே

என்னுணை இனி நான்
  இவனோட வாழமாட்டன்
சொன்னாலும் கேட்கமாட்டான்
  தூரதேசம் போகமாட்டான்

கண்ணான கண்ணு எண்டு
  காரியம் தான் பேசுகிறான்
பெண்ணாகப் பிறந்ததால
  பொறுமையைத்தான் சுமக்கிறன்

— அக்னிராஜ்

## ஏன் என்னை மறந்தீர்

முழுநிலா வதனமோ
  மூச்சு விடும் வெண்ணிலவோ
பனியின் மென்மையோ
  பவளம் இதழ்களோ – என
ஏளனமாய்ச் சொன்னீரா
  ஏன் என்னை மறந்தீர்.

கவி தரு சிலையோ
  கலைமகள் நிலையோ
பரி மலர் சரளோ
  பருகிடும் இதழோ – என
ஏளனமாய்ச் சொன்னீரா
  ஏன் என்னை மறந்தீர்.

சுழலிடும் வண்டோ
  சுற்றிடும் கண்கள்
அலைதரு வடிவோ
  ஆடிடும் குழல்கள் - என
ஏளனமாய்ச் சொன்னீரா
  ஏன் என்னை மறந்தீர்.

— நிலா

## நிலை

நெருப்பாக கிளர்ந்தாலும்
நிதானமாகவே எரிகிறோம்

இன்று காற்றுக்கூட
பகையாய் போனதால்
மூச்சுவிடக்கூட
அனுமதி கேட்கும்
நம்மவர் நிலைகள்

## பழமை

முள்ளை
முள்ளால் எடுப்பது
முன்னோர் வழிதான்
ஆனால்
கண்ணுக்குள் விழுந்த
முள்ளுக்கு
அந்தப்
பழைய தத்துவம்
பயன்படுமா என்ன?

நளாயினி
சர்வானந்தன்

## நங்கையே வருக

1. ''நங்கை''யே வருக
நலம் பல தருக
மங்கையர் குறைகள்
மனதினில் அகல
திங்களாய் வருக
திறன் பல தருக!

2. அங்கையில் சுடர் ஏந்தி
அகிலமெலாம் மகிழ
புன்னகை புரிந்து
பொலிவுடன் வருக
எங்கணும் உன் புகழ்
ஏற்றிட வருக!

3. சிலம்புகள் அசைய
சிரித்து நீ வருக
சிரிப்பினில் அவனி
சிறக்கவே வருக
கரும்பொடு தேனை
கலந்து நீ தருக!

4. இல்லறம் சிறக்க
இனியவள் வருக
நல்லறம் எங்கும்
நலம் பெற வருக
வல்லறம் என்று
வாழ்த்த நீ வருக
நங்கையே வருக
நலம் பல தருக!

— பூநகர் கவிப்பிரியா

## பெண்கள் ஓர் மாற்றூடகம்

சீர் கெட்ட சீதனமே
சீக்கிரம் நீ மறைய
சீரான வாழ்வை
பெண்கள அடைய
சீமானே கேளீர்
சில வார்த்தை......
கொடுக்கலுக்கும்
வாங்கலுக்குமே
சந்தை
சீதனச் சந்தையிலே
சீதனம் கொடுப்பவர் யார்?
சீதனம் கேட்பவர் யார்?
சற்று சிந்தியுங்கள்
திரை கடல் ஓடி
திரவியம் தேடுவது யாருக்கு?
தங்கைக்கோ? அக்காவுக்கோ?
மகளுக்கோ' கொடுப்பதற்கே.
உங்களையும் சந்தையில்
விலைப்பொருளாக மாற்றுவது
எதற்கு சிந்தியுங்கள்
விற்பனைப் பொருளாக
மாறுபவர்களும் நீங்களே
சிந்தியுங்கள் சீமான்களே
கொடுப்பது நீங்களே
வாங்குவதும் நீங்களே
சீதனக் கொடுமையை
வளர்ப்பதும் நீங்களே
பெண்கள் வெறும்
மாற்று ஊடகமே.

— சுகந்தினி
(ஆசிரியை)

# இன்று புதிதாய் பிறந்தோம்

நெடுங் கதை

செல்வி. சி. விஜயலட்சுமி

## முன்கதைச் சுருக்கம்

லீலா பல்கலைக் கழக மாணவியாக இருக்கும்போது சேகர் என்பவனைக் காதலித்தாள். காதல் விவகாரம் அவள் அண்ணன் மார்களுக்குத் தெரியவர இவள் வீட்டை விட்டு வெளியேற முடியாத நிலை உருவாகிறது. இதனால் சேகரை நம்பி வீட்டைவிட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறுகிறாள் லீலா. சேகர் அவளை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கு வாடகைக்கு 'அறை' எடுக்க வந்ததாகச் சொல்லச் சொல்கிறான். சேகர் அந்தப் பெண்ணுடன் பழகியதில் அவள் சேகரின் மனைவி என்பதை உணர்ந்து திகைத்து நிற்கிறாள். லீலா....

நேரங்கள் உருண்டோடியது. லீலாவிற்கு என்ன செய்வது என்ற தடுமாற்றம், எத்தனை நாளைக்கு நான் பொய் சொல்லி இந்த வீட்டில் வாழ முடியும். நான் நாளை படிக்கப் போவதென்றால் யார் எனக்கு உதவி பண்ணப் போறாங்க. ஆனால்......நான் வகுப்புக்கு போகாமல் இருந்து சாந்தி இது பற்றி என்னிடம் கேட்டா நான் என்ன சாட்டு சொல்ல முடியும். எல்லாமே சுத்த சூனியமாக இருந்தது. வேண்டாம் இவ் வாழ்க்கை என்று அவளுக்கு சலித்து விட்டது. அன்றே அந்த நொடிப் பொழுதில் அவனைக் காணும் போதெல்லாம் கழுத்தை நெரித்து கொலை செய்ய வேண்டும் போல் தோன்றியது. எத்தனையோ பேருக்கு முன்னால் என்னுடன் உறவு உரிமை கொண்டாடி சுற்றித்திரிந்து விட்டு இப்போ தான் உத்தமன் என்றது போல் மனைவிக்கு நாடகம் நடிக்கின்றான் அயோக்கிய ராஸ்கல்......லீலாவின் இதயம் துயரம் தாங்காது வெடித்து விடும் போல் இருந்தது. இதயம் குமுற கண்களில் இருந்து நீர் பெருகியது. ஐயோ நான் என்ன செய்வேன். பயங்கர அதிர்ச்சியால் தாங்க முடியாது தவித்தாள். சாந்தி கதவைத் திறந்து கொண்டு தேனீர் டம்ளருடன் வந்தாள். என்ன லீலா பிடிச்சு வைத்த பிள்ளையார் மாதிரி இருக்கிறீங்க. உங்கள் Room ஐ பார்த்தீங்களா? பிடிச்சிருக்கா? அக்கா நான் உங்களை சில கேள்விகள் கேட்கின்றேன். அதுக்கு நீங்க கோவிக்க கூடாது. என்ற படியே அவளைப் பார்த்துக் கொண்டு "சாந்தி இந்த வீட்டில் எத்தனை பேர் இருக்கிறீங்க. உங்கள் குடும்பத்தைப்பற்றி நான் கொஞ்சம் அறியலாமா?" "அதுக்கேன் பயப்படணும். இந்த வீட்டில் நீங்களும் ஒரு அங்கத்தவரா வாழ வேண்டியபடியால் நிட்சயம்நீங்க கேளாமல் நானே சொல்ல வேண்டிய கடமையல்லவா. லீலா எங்கள் வீடும் ஒரு வாடகை வீடுதான். நாங்கள் மாதாந்தம் நூறு ரூபா வாடகை கட்டிக் கொண்டிருக்கிறோம். நாங்க மூன்று பேரும் தான் இங்கு இருக்கிறோம். இவரும் நிரந்தர உழைப்

பில்லே. வாடகை கட்டுவதற்கே கஸ்ரமாகத்தான் இருக்கின்றது. இவர் உழைத்தாலும் மிச்சம் பிடிக்க மாட்டார். என்ன செய்வது. எல்லாம் தலைவிதி தான். லீலா நானும் இவரை காதலிச்சுச் செய்ததில் தான் வீட்டுக்காறரின் உதவியும் எனக்கில்லே. லீலா காதலிச்சு செய்தவங்க யார் உருப்பட்டவங்க? லீலா ரவுனில் எந்த இடத்தில் இருக்கிறீங்க? ஆரைம்பதி றோட்டிலா?......உங்களுக்கு சரவணனைத் தெரியுமா? சரவணன் என்றதும் அவள் இதயம் பதைறென்றது. "இல்லேயே......யாரக்கா அவன்". கதிருவேலுவின் மகன். அண்ணன் முத்து, ஒரு தங்கச்சி Campus இல் படிக்கிறாளாம். அவள் அபாண்டமான உண்மையை தெரியாதது போல் மூடி மறைத்து விட்டு "அக்கா உங்களுக்கு அவர்களை எப்படி தெரியும்." லீலா சரவணனுக்கும் எனக்கும் இந்த உறவு ஆறுவருடங்கள் வரை தொடர் கதையாகத்தான் இருந்தது. இது என்றோ நடந்து முடிந்த கதை. காதலிக்கும் வரை இலட்சியம் இலட்சியம் என்ற சரவணன், கலியாணம் என்ற படியில் ஏறியதும் இலட்சம் இலட்சம் என்றான். அந்த இலட்சம் கொடுமையால் என் காதல் முறிந்து கல்யாணமே குழம்பி விட்டது. இப்படியான அயோக்கியர்கள் உலகத்தில் வாழும்போது இலட்சியம் என்ன? கற்பு என்ன? எல்லாம் உலகத்தை ஏமாற்றும் பசப்புவார்த்தைகள். அவள் கண்கள் குளமாகியது. தாமரையிதழினில் தத்தளிக்கும் நீர் போல அவள் விழிகளிலும் கன்னங்களிலும் கண்ணீர் கோலம் போட்டுக் கொண்டது. 'அக்கா நடந்து முடிந்த கதையை நினைத்து ஏன் அக்கா வருத்தப்படறே. நீ இன்னொருத்தனுக்கு மனைவியான பின்பும் அவனையே நினைத்து நீங்க வருந்துவதில் அர்த்தமில்லே. அக்கா, ஆண்கள் சந்தேகம் படைத்தவர்கள். சந்தேகம் கொண்ட ஆண்களுக்கு ஒரு சின்னப்பொறியே போதும் பெண்களை சித்திரவதை செய்வதற்கு. "லீலா உன்னை என் சகோதரியாக நினைச்சுத்தான் என் வேதனையைச் சொன்னேன். ஒருத்தனால் வஞ்சிக்கப்பட்ட நான் இன்னொருவனால் கை தூக்கப்படுவேன் என்று எண்ணித்தான் என்னுடைய சொந்தம் பந்தம் எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு நான் இவருடன் ஓடி வந்தேன். இவர் கூட எனக்கு எந்த வகையிலும் திருப்தியாக இல்லே. நிம்மதியை தராத சட்டம் நிறைவைத்தராத சமூகம் இந்த இரண்டும் இருந்தும் என்ன அர்த்தம். அவள் தன்னுடைய துயரையெல்லாம் சொல்லி ஆறுதலடைய நேரம் ஆறு மணியாகிவிட்டது.

எத்தனை குழப்பங்கள் எத்தனை துன்பங்கள் வாழ்க்கை முழுவதும் இந்தப் போக்கில் போனால் இதன் முடிவு தான் எங்கே இதய நாடிகள் ஒவ்வொன்றும் துடித்து துடித்து வதை புரிந்தது. பயமும் கவலேயும் சேர்ந்து வேகமான துடிப்பு. அவளால் படுக்கவும் முடியவில்லே சுமையின் அழுக்கமாக அளுத்தம் கண்களை மூடிமூடிப் பார்த்தாள். மூடிவிட்டால் இந்த சுமையில் இருந்து அந்த தாகத்திலிருந்து தப்பி விட முடியாது. சாந்தியோடு பிரச்சனை தன்னுடைய பிரச்சனை இரண்டுக்கும் முடிவு காணுகிறாள். இப்படியான வாழ்வுக்காக நான் சொந்தம், பந்தம், பாசம் எல்லாம் உதறித் தள்ளி விட்டு வந்தேன், வேண்டவே வேண்டாம். இவ் வளவையும் நான் உதறி எறிந்து விட்டு வந்ததே சுகமான வாழ்க்கைக்காகத் தான். சுகமான வாழ்க்கை வாழ யாருக்குத்தான் ஆசையில்லே. இவர்கள் நித்திரையால் எழும்புவதற்கு முன் இந்த வீட்டை விட்டு ஓட வேண்டியது தான். அவள் முடிவு கட்டிக் கொண்டாள். அவள் அந்த வீட்டை விட்டு ஓடி பிறந்த வீட்டுப்படியில் கால் வைத்தாள். கிணற்றடியில் முகம் கழுவிக் கொண்ட சரவணன் ஓடி வந்து கூந்தலேப்பற்றி இழுத்து முதுகில் இரத்தம் பொசிய கட்டையால் அடித்த அடி...... அண்ணா நான் தெரியாமல் தவறு செய்திட்டேன் என்னை மன்னித்து விடு அண்ணா. அண்ணா நான் களங்கப்படவில்லே என்னை நம்பு. அடியாதை அண்ணா அவள் விம்மினாள், பொருமினாள் உன்னை அழைச்சிட்டு போனவன் உன்னை உட்காரவைத்து அழகு பார்த்தானடீ .....மானம் கெட்டவளே முகத்தில் கரியைப் பூசி விட்டு எந்த முகத்தோடு இங்கே வந்தாயடீ. லீலா அன்று வீட்டை விட்டு ஓடியது ஊர் முழுவதும்

தியாக விஷயம் பரவியது. வீட்டை விட்டு ஓடிப்போனவளை யார் கட்ட போறான். இவளை வீட்டில் வைத்துக் கொண்டால் குடும்பத்திற்கே அவமானம், இவ்வளவும் அண்ணா பேசும் வரை அம்மா வாயில்லாத பூச்சி போல ஜடமாக இருந்தாள். இவ்வளவு நடந்ததற்குப் பின்பு தான் என்னை இந்த வீட்டில் அனுமதிக்க அத்தை முடிவு செய்தாள். நீண்ட பெருமூச்சுடன் அவளைப் பார்த்தாள். குறுக்கே பேசாது கேட்டு வந்த மைதிலி தன் கண்களை துடைத்துக் கொண்டு "லீலா அறியாப்பருவத்தில் நீ பிழை விட்டாய் என்றாலும் நீ புத்திசாலியம்மா. சாதி குறைஞ்ச ஒருத்தனை நீ கட்



டியதே ஒரு வேதனை, அத்தோடு அவனுடைய வாழ்க்கையில் நீ குறுக்கிடுவது என்பது அடுத்த வேதனை. சாதி குறைந்தவனுடன் நீ வாழ்ந்தாலும் பறவாயில்லை. பெண்சாதி பிள்ளையென்று வாழுகின்றவனோடு நீ எப்படித் திருப்தியாக வாழ முடியும். உன்னுடைய புத்திசாலித்தனத்தை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். லீலா உன்னுடைய நல்ல மனசுக்கு கடவுள் உன்னை விட மாட்டான். உன் அத்தையின் சிறையை உடைத்து நீ போவதற்கு நான் உதவி பண்ணுவேன்" அக்கா......அவள் கைகளை இறுக்கப்பற்றிக் கொண்டு என் உயிர் உள்ள வரை உங்களை நான் மறக்க மாட்டேன்.

தபால்காரன் வந்து படலையில் ஊதிய விசிலின் சத்தம் மைதிலியின் காதில் விழ ஓடோடிச் சென்று கடிதத்தை வாங்கிக் கொண்டாள். அது லீலாவின் பெயருக்கே வந்தது. மைதிலி பரபரப்புடன் ஓடி வந்தவாறு "லீலா உனக்கு கடிதம் வந்திருக்கு" அவள் ஆவலுடன் பிரித்தாள். அவளின் எதிர்பார்ப்புகள்வேறு வடிவங்கள் உருவெடுத்தன. ஒரு நிறுவனத்தில் அவளுக்கு மனேச்சர் பதவி கிடைத்ததாக அனுப்பப்பட்ட கடிதம் தான் அது. "லீலா நீ இன்றைக்கே அத்தை வருவதற்கு முன்பாக வீட்டை விட்டுப் போய் விடு." சூட்கேசை திறந்து ஐம்பது ரூபாய் நோட்டை அவளிடம் கொடுத்தாள். அக்கா நான் வீட்டை விட்டுப் போனால் என்னால் உங்களுக்கு பிரச்சனை ஏற்படும். என்னால் உங்கள் சகோதர உறவே முறியக் கூடும்." "இல்லை லீலா நீ பயப்பிடாமல் போ. நான் எதையோ சொல்லி சமாளித்துக் கொள்கிறேன். ஆனால்...... அவள் தொண்டை கரகரக்க லீலா "உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாத வேதனை தான். நீ போய் வாம்மா போய் எனக்கு கடிதம் போட்டுக் கொள்" அவளை ஆசீர்வதித்து வாசல் வரை அவளை வழி அனுப்பி வைத்தாள் மைதிலி.

'பஸ்சும் வர அவள் அதில் ஏறி அந்த நிறுவன வாசலில் இறங்கிக் கொண்டாள். அவள் அலுவலக கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். லீலாவிற்கு அனுமதிக் கடிதம் கொடுக்கப்பட்டது அவளுக்கென்று சகல வசதிகளுடன் கூடிய அறையும் கொடுக்கப்பட்டது. நாட்கள் நகர்ந்தன. காலம் செல்லச் செல்ல அவளுக்கு அந்த நிறுவனத்தில் தனிமதிப்பும் செல்வாக்கும் உயர்ந்தது. அவளின் மதிப்பிற்கு காரணம் அவளுடைய கெட்டித்தனம் தான். லீலாவிற்கு ஒரு கிழமைகளுக்கு ஒரு தடவை மைதிலியின் கடிதத் தொடர்பு இருந்து கொண்டது. அத்தை வீட்டில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும் மைதிலி ஒளிவு மறைவில்லாமல் எழுதிக் கொள்வாள். அத்தை மகள் சங்கீதா யாரோ சிங்களவனை காதலித்து அவனுடன் ஓடிப்போய் விட்டாள் என்பதையும் அவளை கண்டுபி

டித்து அவனிடம் இருந்து மீட்டுக் கொண்டு வருவதற்கு கொழும்பிலுள்ள சகல பொலீஸ் நிலையங்களிலும் புகார் கொடுத்ததாகவும் அவளை கண்டுபிடிப்பதற்காக எவ்வளவோ இலட்சங்கள் செலவழிக்கப்பட்டதாகவும் ஒரு நாள் மைதிலி கடிதத்தில் எழுதியிருந்தாள். அடுத்த கடிதத்தில் சங்கீதாவை கண்டு பிடித்து அவளை ஊருக்கு கொண்டு வந்து எவ்வளவோ இலட்சங்கள் கொடுத்து அவளுக்கு கலியாணம் நடந்து முடிந்து விட்டது என்பதையும், அத்தை இப்போ தான் தனக்கு செய்த குற்றத்தை நினைத்து கவலைப்படுகின்ரு என்றும் அவள் வரிசை வரிசையாக எழுதிக் கொண்டாள். சங்கீதாவின் கலியாணத்தை உன் வீட்டுக்காரர்களும் சேர்த்து நடத்தி விட்டு போய்விட்டார்கள். உன்னைத்தான் இன்னும் புறக்கணித்து கொண்டேயிருக்கின்ருர்கள், என்ற போதெல்லாம் எனக்கு வேதனையாக இருக்கின்றது.' லீலா பணம் பல காரியம் செய்யும் இல்லையா? நீ நன்ரு உழைத்து லட்சாதிபதியாகி விட்டால் உன்னுடைய குற்றமும் மறைக்கப்பட்டு உனக்கும் ஒரு புது வாழ்வு கிடைக்க நீ முயற்சி செய். லீலா பணக்காரனுக்கு ஒரு நியாயம், ஏழைக்கு ஒரு நியாயம், இது தான் சமூகம். நாட்கள் நகர்ந்தன லீலா வேலை செய்து நான்கு வருடங்களுக்கு மேலாகி விட்டது. அவள் மாதாந்தம் கொழுத்த சம்பளமாகப் பெறும் உழைப்பாளி, தனது சம்பளத்தில் ஒரு பகுதியை செலவுக்கு எடுத்துக் கொண்டு மிகுதியை தனது பெயரில் வங்கியில் சேமிப்பில் போட்டுக் கொண்டாள்.

லீலா ஓய்வு நேரங்களில் கதைப்புத்தகம் என்றும் பேப்பர் என்றும் படிப்பது வழக்கம். வழமைபோல அன்றும் அவள் பேப்பரில் உள்ள தலையங்கங்களை ஒவ்வொன்ருகப் படித்துக்கொண்டாள். பேப்பரின் ஒரு மூலையில் மோட்டார் விபத்தில் இளைஞனின் கால் சேதம். அவள் அதை நிதானமாகப் பார்த்தாள். யாழ்ப்பாணம் ஆரையம் பதியைச் சேர்ந்த கதிர்வேலு சரவணன் நெஞ்சு பகிரென்றது. தொண்டை வறண்டது. இரத்த பாசம் பெண் என்ற இரக்கம் இவ்வளவும் அவளை நிலைகுலைய வைத்தது. ஒரு வார லீவுடன் அவள் ஊருக்குத் திரும்புகிருள்.

அந்த நிலையிலும் அவள் மனம் சலனப்பட்டது. அண்ணு அந்த நிலையிலும் முன்பு போல் என்னைப் பேசி விட்டால்......பலதும் எண்ணிக் கலவரப்பட்டாள். கொம்பனி அலுவலாக செயற்திட்டங்களுக்குப் போவதற்கென கொடுக்கப்பட்ட 'சாளியில்' அவள் உட்காந்தது தான் தெரியும். அது வெகு சீக்கிரத்தில் வைத்தியசாலையை அடைந்து கொண்டது. உள்ளே நுழைந்தாள். சரவணனின் கைகளில் இரத்தம் ஏறிக்கொண்டிருக்க அம்மா அவனின் கைகளைப்பிடித்து கொண்டிருந்தாள். சொந்தம் பந்தம் எல்லாம் அதற்குள் நெரிச்சலாக நின்று கொண்டார்கள். எட்டு வருஷமாக சொந்த பந்தம் இழந்து ஊரை விட்டு ஒளித்து வாழ்ந்தது அந்த நிமிடத்தில் அவளுக்கு வேதனையைக் கிளப்பி விட்டது. எல்லோரும் அவளை விடுப்பாக பார்த்துக் கொள்ள அவர்களின் பார்வைகள் அவளுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது. அவர்களையும் அவள் விலத்திக் கொண்டு, அவள் கட்டிலுக்கு அருகில் நின்று ஒவ்வொன்ருகப் பார்த்தாள். ஒரு கால் கழற்றப்பட்டு இருந்தது. அந்த துயரை அவளால் தாங்க முடியவில்லை. அறிவிழந்து மயக்க நிலையில் இருந்தவனின் முகத்தில் எவ்வளவோ மாற்றங்களை அவளால் உணரமுடிந்தது. வந்தவர்கள் எல்லோரும் ஒவ்வொருவராகப் போய் விட்டார்கள். அவர்கள் போய் சில நிமிடங்களின் பின் சரவணன் மெதுவாக கண்களை திறந்து கொண்டான். மயக்கம் அவனுக்கு சரியாக தெளியவில்லை என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். மீண்டும் ஒரு தடவை அவன் கண் வெட்டாது அவளையே பார்த்துக் கொண்டு அவளது கைகளை இறுகப்பற்றிக் கொண்டு லீ......லா லீ......லா அவன் மெதுவாக அனுங்கினுன். லீலா அடக்கி வைத்த அழுகை கிளர்ந்தெழுந்தது. எத்தனை வருட அழுகை அது. மூன்று துருவங்களும் அழுது தங்கள் கவலைகளை போக்கிக் கொண்டனர். அவன் தொண்டை சரகரக்க லீலா இனி எங்க குடும்பத்தை என்னுல் காப்பற்றமுடியாது நீயே அந்த பொறுப்பை ஏற்றுக் கொள் லீலா .... நடந்ததை யெல்லாம் கனவா

(29ஆம் பக்கம் பார்க்க)

# CHILD LABOUR

**Mrs. Padma Ranasinghe**
(Commissioner of Probation & Child Care Services)

Child Labour cannot be considered as a new phenomenon in the society for the working children have been in existence in every country for centuries. The children who are the would be responsible citizens in the society get an informal training in household activities while they are being brought up by parents or custodians. No sensible person will object to this by which process any normal child will learn to develop self confidence, to share the responsibility and to make a contribution either to his or her family or to the community. One can argue that it is in the interest of a child to attend to some kind of work rather than idle. Is it what is meant by the term 'Child Labour'? The answer is in the negative. The term 'Child Labour' bears a negative connotation. It is usually considered a phenomenon that ought to be eliminated. Some times it is linked with exploitation. When it disrupts child's education and when it is hazardous to his health and development it is treated as Child Labour - that should be abolished.

Those who are ready to exploit human labour will have a preference for child employees. The fact that the child workers are not organized and that they do not have a bargaining power is a privilege for the employer. Cheap labour will make his profits more attractive and he will be free from the demands of the workers. Unfortunately he cannot appreciate the fact that the exploitation of child labour will hamper both physical and mental development of the working children. He is aware that it is improper and immoral to go for cheap labour and he is totally inconsiderate about the damage caused to their growth. That is why it is so difficult to eliminate child labour from our society.

There has been a greater awareness about the rights of the children that has led to the formulation of necessary legislation in various countries to safeguard their interests. United Nation's working group has drafted a convention on the rights of the child that covers all the important aspects which are necessary for the unhampered development of the child. This draft convention is being taken up by the General Assembly of the United Nations for approval of the international community.

Sri Lanka has also been conscious about the needs and the rights of the children and has introduced necessary legislation to safeguard their interests. Our constitution declares that the state shall promote with special care the interests of children and youth, so as to ensure their full development, physical, mental, moral, religious and social and to protect them from exploitation and discrimination. A Children's Charter has been drafted few years ago and has to be finalised within a few months time.

Legal protection has been provided to our children by number of legal enactments. Some of the outstanding laws are as follows :

- (i) The Children and young persons Ordinance No.48 of 1939 as amended ;
- (ii) Adoption Ordinance No. 24 of 1941 as amended ;
- (iii) The orphanages Act No. 22 of 1941 as amended;
- (iv) Employment of women and young persons and Children Act No. 47 of 1956 as amended.

Under the Children and young person ordinance Children under the age of twelve years should not be employed and under the Employment of Women and Young Person and Children Ordinance the minimum age for employment is raised to 14 years. Under both these acts provisions have been made :

- (a) to protect the working children from exploitation and bodily injuries, and,
- (b) to allow them to continue their education without being disrupted.

It is prohibited to tax them too much as over strain hampers their growth. Following provisions of the Employment of Women, Young Persons and Children indicate the broad coverage provided for their safety.

No child shall be employed :

- (a) before the close of school hours on any day on which he is required to attend school, or,
- (b) at any time between 8 p.m. and 6 a.m. , or,
- (c) for more than two hours on any day on which he is required to attend school, or
- (d) for more than two hours on any Sunday, or,
- (e) to lift, carry or move anything so heavy as to be likely to cause injury to him, or
- (f) in any occupation likely to be injurious to his life, limb, health or education regard being had to his physical condition and no child shall engage or be employed in street trading.

The actual legal provision differ according to the nature of work in each economic sector. With regard to industrial under-takings, Children below twelve are totally prohibited from working. Children between twelve and fourteen may be employed in family under-takings provided they belong to the

family which maintains the undertaking, and if the undertaking is not of a dangerous nature not involving street hawking. Children between fourteen and fifteen. in addition may work in industrial undertakings provided they receive a licence from an authorised officer stating that the training would not be injurious to the health of the trainee. Children under the age of sixteen cannot work at night in an industrial undertaking unless it is a family undertaking or an industrail untertaking or an unforseen emergency. In the latter case again permission from an authorised officer is required.

The law is not so strict with regard to the agricultural sector. As a general rule, children under the age of fourteen are not permitted to work in agro-industries specially if the work is injurious to the health. However, there are no restrictions on children working in the fields provided they are not employed during school hours.

Restrictions have been laid down in Children and Young Persons Ordinance on children taking part in entertainment and training for performances of a dangerous nature. It is an offence the cause or encourage seduction or prostitution of a girl under sixteen, to allow persons under sixteen to be in brothels and to cause orprocure persons under sixteen to beg and giving excisable articles to children under five. When the above mentioned restrictions are examined it is evident that a wide range of provisions have been included in the relevent Ordinance to safeguard children's interests. But new amendments to the relevant laws may be necessary to suit the changing needs of the society and to tackle the new forms of child abuse and child labour. For exemple, I would like to mention just one aspect of child labour, i. e prostitution which is not tackled by the existing laws. Nevertheless if the existing laws are enforced strictly it is possible to reduce child labour tremendously. There are various forces which hamper the strict enforcement of the laws pertaining to child labour. This set back is experienced not only in this country but also in almost all parts of the world.

Most prevalent form of child labour can be found in the domestic service. Most of the girl domestics are abused and thrown into a gloomy future. Some girls of this catagory end up as prostitutes. The only avenue open for them was prostitution. I have come across quite a number of youug village girls who have got children out of wedlock. They have divulged to me that the babies were the outcome of domestic service. Some female children in domestic service run away when they cannot tolerate ill treatment any more and get caught to Police.

It is a common sight in Sri Lanka to see the child conductors in private buses. The number of children hawking on the pavement has also increased considerably. Many boys are employed as boy prostitutes in tourist hotels. According to Mr. Tim Bars who has made a survey on this menace the situation has risen to alarming levels. Another catagory of children are engaged in drug trafficking.

Elimination of child labour cannot be achieved within a short period. There should be a long term well formulated plan to achieve this objective. One of the first measures that should be taken in this direction is to develop awareness campaigns.

There seems to be no disagreement that poverty is the main cause of child labour. It cannot be denied that the growth and further develpment of production processes based on capitalism has magnified the problem. This does not mean that the children are not employed in the rural agricultural sector. Although child labour is in existance in the rural agricultural sector the number employed is relatively small. When the population growth and the needs of evergrowing children cannot be matched with resources, that imbalance will also lead to more child labour. The children from broken families or undesirable environments and those who are abandoned also tend to join the child labour force. Some parents see their children as an income source to the family and encourage them to work and share the famiiy responsibility. Some other catagory of parents are deceived by the middle men who supply domestic servants to the affluent and middle class families in the cities. Those parents give the children away of the promises for bright prospects for the children who will finally become the innocent victims of the game. Now it is evident that the child Labour is not caused by one single factor but is the result of variety of factors.

It is a must to collect al' necessary information about child labour in Sri Lanka. No proper islandwide survey has been conducted to assess the magnitude of the problem. From the sample surveys conducted it can be assessed that there may be about 400,000 working children at present out of 3,675,12( children between 5-14. Compulsory universal education is a major step that should be taken to combat child lobour. Strict enforcement of laws should be accompanied by a wide range of measures covering child welfare, income generation and family welfare.

As there are number of State and Non - governmental Agencies dealing with child welfare. A collective effort to eliminate child labour will be a meaningful step in the right direction. □

---

## இன்று...

(45ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறந்து விடு. நான் உனக்கு செய்த குற்றத்திற்கு ஆண்டவனாய் தந்த தண்டனை இது என்னை...மன்னிச்சிடு லீலா..." "அண்ணு உங்களை நான் எதற்காக கோபிக்க வேண்டும். அண்ணன் என்ற பாசத்தோடு தான் நீ என்னை கண்டித்தாய். நீங்க எல்லாம் என்னை புறக்கணிச்சு வைத்த படியால் தான் எனக்கு தன்மானம் பிறந்தது. அதனுல் தான் நான் இன்று இந்தளவுக்கு உயர்ந்துள்ளேன். நீங்கள் கவலைப்படாதீங்க." அவள் கண்களில் திரண்ட கண்ணீர் துளிகள் அவன் கால்களில் விழுந்து ஒத்தனம் கொடுத்தன. □

முற்றும்

சிரிக்க
சிந்திக்க
கதை மூன்று

தலைப்பு ஒன்று

# பெண்மைக்குப் புரிவதில்லை 1

இரா. பாலசந்திரன். B.A.

பிரேமா.. இதயம் நிறைய கனவுகளைச் சுமந்த இருபத்தி நான்கு வயதுக் கன்னி.

அவள் கொஞ்சமும் எதிர்பாராத அந்த வாழ்க்கை அமைந்தால்...

அவள் எவ்வளவு கனவு கண்டாள். என்னென்ன கற்பனைகள் செய்தாள். எல்லாம் இலவு காத்த கிளிதானு?

இந்த சமுதாய அமைப்புக்கு சீதனக் கொடுமைக்கு அவளும் பலிதானு?

"பிரேமா .. உன்னைப் பார்க்க வந்திருக்கிருர், இஞ்ச கொஞ்சம் வா ..." தந்தையின் கனிவான குரல் அவள் செவிகளில் கடூரமாக ஒலித்தது. அவளுக்கு நெஞ்சு வலித்தது.

வந்திருப்பவர் இராமச்சந்திரன். அடுத்த வீட்டுக்காரர். படித்தவர், கச்சேரியில் பெரிய உத்தியோகம். அவரை "இராமச் சந்திரமூர்த்தி" என்று பட்டப் பெயர் கொண்டு அவள் சினேகிதிகள் கேலி செய்வதைக் கேள்விப்பட்டிருக்கின்ருள். மனைவியை இழந்து ஐந்து வருடத்திற்கு மேலாகியும் மறுமணம் செய்யாதது, பெண்கள் தொடர்பு இல்லாதது... இப்படி ஒரு பட்டத்தை கன்னிப் பெண்கள் வழங்கியுள்ளனர்.

வசதி இருந்தும் வாழ்வின் எவ்வித சுவைகளையும் வேண்டாதவராய் தானுண்டு, தன் மகளுண்டு என்று அமைதியாக வாழ்வதால் ஊரும் அவரை நல்ல அந்தஸ்தில் உயர்த்தி வைத்துள்ளது.

சில நாட்களாக தன் வீட்டில் ஏதோ பிரச்சினை உருவாகியுள்ளதை அறிந்தாலும் அதைப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள வில்லை பிரேமா. அனேகமாக தன் திருமண விசயமாகத்தான் இருக்கும் என்று நினைத்தாள்.

அடிக்கடி இராமச்சந்திரன் தன் வீட்டிற்கு வருவதும் ஏதோ திருமணப் பேச்சு நடைபெறுவதும் .. அவர்மகள் சுவிதாவுக்கு அம்மா பார்ப்பதாக தங்கச்சி சொன்னதும்...

அவள்தான் அம்மாவா?

பொறி கலங்கிப் போனுள் பிரேமா.

பிள்ளைக்காக அவர் மறுமணம் செய்ய வேண்டும் என்று அப்பா அடிக்கடி வாதிடுவது. பிரேமாவைக் கூட செய்யலாம் என்று அம்மா கதைத்தது .. ...

அப்படியானுல் இன்று அவர் வந்திருப்பது என்னைப் பெண் பார்க்கவா ...

மனம் நிறைய ஆசைகளைச் சுமந்து கொண்டு நாளொரு கனவு பொழுதொரு நினைவாகச் செய்த கற்பனைகள் ......

எல்லாம் கற்பனைகள் தானு?

திருமணமான அன்றே பிள்ளையை வளர்க்கும் பொறுப்பு. அவள் தாயாக வாழ்க்கைப் பட வேண்டுமா? காவியத்தில் கண்டகாதல். கற்பனையில் வாழ்ந்த வாழ்க்கை.

பிள்ளை பெறும் தொல்லை இல்லையடி உனக்கு என்று நண்பிகள் கேலி செய்தால்....

சாதாரண குமாஸ்தாவின் மகள் பிரேமா. அவளுக்குப் பின் மூன்று பெண்கள், மூன்றும் குமர் இருப்பது வீடு ஒன்றுதான். பணம் என்று சொல்ல அதிகம் இல்லை.

சீதனச் சந்தையில்அப்பாவால் நிச்சயம் போட்டி போட முடியாது. இப்படி ஒரு வசதி வரும் பொழுது தவற விடும் நிலையில் அவர் இல்லை. என்னைக் கரைசேர்த்தால் மற்றதுகளுக்கு ஏதாவது வழி செய்யலாம் என்றுதான் தந்தை மனக் கணக்கு போடும்.

ஒரு பிள்ளையுடன் இரண்டாம் தார வாழ்க்கையை அவளால் ஏற்றுக் கொள்ள முடியாதே.....

" பிரேமா ...... உன்னைப் பார்க்க எவ்வளவு நேரமாக காத்துக்கொண்டிருக்கிருர் " தாயைக்கூட வெறுத்தாள்.

என்ன உற்சாகமாக இருக்கிருர் இராமச்சந்திரமூர்த்தி ... எல்லாம் கள்ளச் சாமியார் கள்தான். சந்தர்ப்பம் கிடைத்தால் ..... மீண்டும் ஒரு கன்னி அவருக்குத் தேவைப் படுகிறது. எங்கள் கனவுகளை அழிக்கவே இப்படி ஆண்களா?

ஆண்கள் ஆண்கள்தான்.

'' வாம்மா ..... இப்படி இரு நாங்கள் சம்மதம் குடுத்துட்டம் உன்ர வாயால மறுமொழி கேக்க வேணுமாம் ...... தெய்வம் தான் இவரைக் கொண்டு வந்து சேர்த்திருக்கு " அப்பா தன் சந்தோசத்துடன். " பிள்ளைக்கு நல்ல வாழ்வு அமைத்துக் கொடுக்க முடியாதவர் ஏன் பிள்ளையைப் பெறுகினம் "

கலங்கிய கண்களை மெள்ளத் துடைத்துக் கொண்டு அமர்ந்தாள் பிரேமா.

எல்லாம் முடிந்து விட்டது. அப்பா சம்மதம் கொடுத்துவிட்டார். இனி மாற்ற முடியாது, ஒரு நிமிடம் கண்மூடி தன் கன்னி மன ஆசைகளைப் பலி கொடுத்தாள் பிரேமா.

''பிரேமா...... எனக்கு இரண்டு வருடம் " ஸ்கோல் " கிடைச்சிருக்கு போகாமவிடத் தான் பாத்தனுன். மகள விட்டுட்டு என்னல போகேலாது. ஆனல் மேலிடம் கட்டாயம் போகவேணுமெண்டு நிக்கினம். அதனலதான் போகச் சம்மதித்தன். அவளுக்கு எல்லாம் இனி நீதான். என்னல இன்னெரு அம்மாவ அவளுக்கு தரேலாது. அது கனவிலும் நடக்காது. ஆனு அவளுக்கொரு அக்காவை உருவாக்க முடியுமெண்டுதான்... தத்தெடுக்காமலே உன்னை என் மகளா ஏற்றுக் கொள்ளுகிறன். இனி நீயும் என் மகள். உனக்கு நல்ல வாழ்வை அமைத்துத் தாறதுதான் உன் பெற்ருேருக்கு நான் கொடுக்கும் கூலி .....

ஓ ...... இராமச்சந்திரமூர்த்தி ...... இன்னும் இராமர்கள் வாழ்கின்ருர்கள் தான் . .. ஐயா ... அக்கினியில் குளித்தாலும் என் பாவம் தீருமா? ...

பிரேமாவின் ஆத்மா ... கதறித்துடித்தது.

# 2

"அக்கா...... உங்கட அவர் காரில அடிபட்டு ஆஸ்பத்திரியில கிடக்கிருர். கால் கழட்டவேணுமாம்......" பக்கத்து வீட்டு பத்மாவின் வார்த்தைகள் செவிப்பாறையைத் தாக்கியதில் ஒரு கணம் அதிர்ந்தாள் கல்யாணி.

''கல்யாணி நல்ல சந்தர்ப்பம்......" அவளுக்கு ஏதோ ஓர் உள் உணர்வு உணர்த்தியது.

எது நல்ல சந்தர்ப்பம் கணவன் முடமாகிக் கிடப்பதா?

அவன் கணவனு? அது தானே அவள் வாழ்க்கை.

கல்யாணி ஒரு சங்கீத ஆசிரியை. சாதாரண ஒரு தொழிலாளிக்கு மகளாகப் பிறந்ததால், எவ்வித சொத்தோ சுகமோ இல்லாததால் அவளுக்கேற்ற மணமகனை அவள் பெற்ருேரால் தேர்ந்தெடுக்க முடியவில்லை.



ஏதோ சாதகம் பொருந்திய ஒரு ஆண்மகனைத் திருமணம் செய்து வைத்தனர். அவள் கணவன் சின்னத்துரை பல சரக்குக் கடையொன்றில் வேலை பார்த்தான்.

ஆரம்ப வாழ்க்கை ஆனந்தமாகத்தான் இருந்தது. காலம் செல்ல சின்னத்துரையால் பொருளாதாரத்தில் எழுச்சி பெற முடியவில்லை. கல்யாணியின் சம்பளம் தான் குடும்பத்தை இழுத்தது. அதற்காக அவள் கலங்கவில்லை.

ஏதோ 'விதி' என்று பொறுத்துக் கொண்டாள். சும்மா இருப்பதில் சுகம் கண்ட சின்னத்துரை வேலையைவிட்டு மனைவி சம்பாத்தியத்தில் பங்கு போடும் நிலைக்கு வந்தான். அந்த ஊரில் சண்டித்தனம் விடுவது தொடக்கம் தவறான வழிகள் எல்லாம் அவன் பாதையாகின.

இதனால் மனமுடைந்த கல்யாணி அவனைப் பலமுறை கண்டித்தாள். மனைவியின் கண்டனம் அவனை ஒரு குடிகாரனாக்கியது.

குடித்துவிட்டு தெருவில் அவன் செய்யும் செயல்கள் அவள் தன் — மானத்தையே உலுக்கியது.

ஊராரின் அறிவுரைகள், சக ஆசிரியர்களின் குத்தல் பேச்சுக்கள், அவள் மனதை மேலும் புண்ணாக்கியது.

எப்படியாவது கணவனைத் திருத்த வேண்டும் என்று வைராக்கியம் கொண்டாள்.

பாரத யுத்தமே அவள் வீட்டில் நடந்தது. பதினெட்டு நாட்களல்ல 18 மாதங்கள். முடிவு—

கணவனிடம் அடி உதை பட்டாள். அக்கம் பக்கத்தாரிடம் அவமானப்பட்டாள்.

நேரடியாக தன்மானம் மாத்திரமன்றி தன் குடும்ப கௌரவம் பாதிக்கப்படுவதுடன் தன் பொருளாதாரம் பெரிதும் சீரழிக்கப்படுவதை உணர்ந்து கடைசி முடிவுக்கு வந்தாள் கல்யாணி.

''டிவோஸ்''- விவாகரத்து கோரினாள். ஆனால் அதற்கு அவன் இடம் கொடுக்கவில்லை. சட்டத்தை நாடினாள். சட்டமும் இன்றைய நிலையில் அவளுக்கு சாதகமாக இல்லை.

எப்படியாவது அவனிடமிருந்து பிரிந்து வாழ்ந்தால் போதும் என்று முயன்றாள். அவள் முயற்சி எதுவும் சரிவரவில்லை. சின்னத்துரை தன் 'சண்டித்தனத்தால்' அவற்றையெல்லாம் முறியடித்தான். விவாகரத்தைப் பற்றி கதைத்தாலே குடித்துவிட்டு இவள் போகுமிடமெல்லாம் —பாடசாலை பொது இடங்கள் உள்பட கலாட்டா செய்தான்.

வெளியில் தலை காட்ட முடியாத நிலையை எங்கே உருவாக்கி விடுவானோ என்ற பயத்தால் பிரிந்து வாழ்வவதையும் தற்காலிகமாக நிறுத்திவைத்தாள் கல்யாணி.

எப்படியும் அவனிடமிருந்து பிரிந்து விட வேண்டும் என்பதே அவள் லட்சியமாகிவிட்டது. பெண்மை அந்த சந்தர்ப்பத்தைப்தைப் பார்த்து பதுங்கி இருந்தது.

அந்த சந்தர்ப்பம் வந்துவிட்டதா?

திடுக்கிட்டவளாய் நிமிர்ந்தவள் ஏதோ சிந்தனையில் உடுத்த உடையுடன் தன்னை அறியாமலேயே ஆஸ்பத்திரி வாசல் வரை தான் வந்து விட்டதை உணர்ந்தாள்.

(38ஆம் பக்கம் பார்க்க)

# 'சுகமான சோகத்துடன்'

செல்வி. துளசி
திருஞானசம்பந்தன்

ஒரு பனித்துளி
கொதிக்கிறது
அதன் இருவிழிகள்
பார்வையால் எரிக்கின்றது
இந்த வேதனையை
ஒரு கவிதை
கருத்தரிக்கிறது

பாதி ராத்திரியில்,
ஒரு பௌர்ணமி
பஸ்மமாகிப் போக......
என் ஆகாயமெல்லாம்
அப்பட்டமான இருட்டு

நந்தவனம் ஒன்று
'பொட்டல்வெளி' என்று
பெயர் மாற்றம் செய்ய... ,
இளவேனிலின் சுவடேயில்லாமல்
நிலமெல்லாம் நெருப்புக்குளம்

முகையவிழ்ந்த அனிச்சமலர்
முகம் திருப்பிக் கொள்ள......,
இதழ்களில்
கோடு வரையும் கோபங்கள்!

நேசத்தின் முகவரியை மறந்து,
ஒரு நெஞ்சு,
என் ஆசைகள் மீது
ஆணியறையும்.

ப்ரிய,
'இனிஷியல்' இல்லாத
குழந்தையின் வேதனை போல
இதுவும் ஆழமானது

அரசாங்க எச்சரிக்கையுடன்
'சிகரெட்' விளம்பரம் போல
உன்னையும்
புரிந்து கொள்ள முடியவில்லை

தெருவோரத்து மதில்கள் தாங்கும்
கிழிந்த பிரசுரங்களை
ஞாபகப்படுத்தும்
உன் அரைகுறைப் பேச்சும்,
அலட்சியப் பார்வையும்......!

உன் மௌன நிஷ்டையின்
முடிவில்,
என் ஆத்மாவைக் கொன்ற
குற்றவாளியாகத்தான் இருப்பாய்!

நீ பேசிய போது
நூறு கஜம் நெருங்கினேன்;
உன் மௌனத்திலே,
ஆயிரம் கஜம்
அப்பாலே தூக்கியெறியப்பட்டேன்.

பொழுதோடு மனஸ்தாபம் என்று,
சூரியன்,
இருட்டுக்குள்
புதைந்து கொள்ள முடியாது
தயவு செய்து பேசு!
இதழ்களின் ஸ்பரிசமில்லாமல்
ஒரு முத்தம்
முகமிழந்து போகிறது
சீக்கிரம் பேசு!

ஓமகுண்டத் தீயிலே
ஒரு கவித் துளி
இன்னும்
ஈரமாகத்தான் இருக்கிறது
வந்து ஒற்றிக் கொள்!

ப்ரிய,
எனக்குத் தெரியும்,
'நீ வரமாட்டாய்!'
இது,
தூரத் தூரப் போகின்ற
ஒரு துருவ நட்சத்திரத்தைத்
துரத்திப்பிடிக்க நினைக்கும்
சிறுபிள்ளைத்தனம்!

சிதறிப் போன கண்ணாடித்தூள்களைச்
சிறுகச் சிறுக சேர்த்து,
முகம் பார்த்து விடத் துடிக்கும்
முட்டாள்த்தனம்!

இந்தக் கவிதையின் ஜீவன்கூட,
எனக்குக்
கற்றுத் தரும் பாடம்,
'நீ
என்னை நேசிக்கவில்லை
என்பதுதான்
நான்,
இறந்து போக வேண்டியதில்லை
நரகத்துக்கு;
இந்த வேதனை போதும்

தீ வளர்க்கத் தயங்கும்
உன்னிடம்
கூதல் என்று,
குளிர்காய வந்தது
என் தப்புதான்

உன்னோடு
பழகியிருக்கவே வேண்டாம்;
உன்னைப் பார்த்ததற்கே
ஏதாவது
பிராயச்சித்தம் பண்ண வேண்டும்

இது,
ஒரு வேதனைப் புரட்சி!
உன் இதய தர்பாரிலே
ஆட்சிக்கு வர ஆசைப்பட்ட
எனக்கு,
இது ஆயுட் தண்டனை!

ப்ரிய,
ஆத்திரப்படும் மனதின்
ஆழத்திலே
இன்னும்
உன் பெயர்
உச்சரிக்கப்படுகிறது,
இப்போது கூட,
உன்னை அழைத்து,
நான்
சொல்ல ஆசைப்படுவதெல்லாம்,
'மனஸ்தாபப்படும் போது,
உன்னை
அதிகமாய் நேசிக்கிறேன்'
என்பது தான்.

மனதிலே பட்ட கீறல்களை
வருடிப் பார்க்கும் போது
இதமாக இருக்கிறதே......
அதன் இரகசியமே,
உன்னை நேசிப்பதுதான். □

## காதலைப் பொழிந்திடாரோ

கட்டுரை எழுதச் சென்றேன்
காவியம் படிக்கச் சொன்னார்
சிட்டென என்றன் நெஞ்சம்
சிறகடித் தவரை நாடும்.
வெட்டிய கண்ணின் வீச்சென்
விழிகளிற் பட்ட போது
நிட்டையில் இருந்தேன், என்றன்
நெஞ்சினில் நிறைந்து நின்றார்.
பட்டெனுங் கன்னம் மீது
பனிமுத்தந் தந்திடாரோ
கட்டுடல் அணைத் தென்றன்மேற்
காதலைப் பொழிந்திடாரோ.

— ப. மகேஸ்வரி

# அன்றைய இன்றைய நதியோரக் காதல்

*''காதல் என்பது ஒரு சூதாட்டம் - அதனை தோற்கடிக்க தயாரானவர்கள் ஆடலாம்''*

இன்றைய தலைமுறையினரால் ஒரு நாகரீகமாகக் கருதப்படுகின்ற காதல் உண்மையிலேயே ஒரு ஆழ்ந்த காதல்தானா? என்பது சிந்திக்கவேண்டிய ஒரு விடயமாகும். இன்று பணத்திற்காகவோ அல்லது அழகிற்காகவோ அல்லது ஏதாவது ஒரு சவாலுக்காகவோதான் காதல் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. ஆத்மார்த்தமான இரு உள்ளங்களின் தூய்மையான அன்புதான் காதல் ஆகும். அத்தகைய காதலிலே காமம் என்பது இரண்டாம் பட்சமானதுதான். காமத்திற்கு இடங்கொடுக்காத அன்புமிக்க காதலர்கள் இன்று எத்தனை பேர்?

காதல் என்பது கடைச்சரக்காகிப் போனதன் காரணத்தால்தான் எத்தனையோ மங்கையர்கள் விற்கப்படாத சரக்காகி விற்கப்பட முடியாதவர்களாகி விடுகின்றார்கள். இத்தகைய காதல் அதாவது இன்றைய தூய்மையற்ற காமவெறி கொண்ட காதல் எவ்வாறு தோன்றுகின்றது, என நோக்கின் ஒரு குறிப்பிட்ட வாலிபன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட பெண்ணை சுற்றித் திரிவான். அவ்வாலிபன் தன்னைச் சுற்றி வருவதைக் கண்டு சகிக்காத (?) அந்தப் பெண்ணும் தன் சம்மதத்தை தெரிவிப்பாள். ஆற்று மணல் மேடுகளிலும், நறுமணம் வீசும் பூங்காக்களிலும், புல்தரைகளிலும் திரைப் படங்களிலே வரும் காதலர்களின் சல்லாபிக்கும் பாணியிலே எமது காதலர்களும் வீதிகளிலே பவனி வருவார்கள். ஒழுங்கைகளிலும், திருப்பங்களிலும், ஏன் சுடலைகளிலும் கூட அவர்கள் தனிமையை நாடிச் செல்கிறார்கள் என்பது எமது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். அவ்வாறு அவர்கள் செல்வதற்கும், அதனால் வருகின்ற பிரதிபலிப்பிற்கும் ஆணைவிட பெண்தான் அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றாள்.

எத்தனையோ திரைப்படங்களில் காதலித்தவன் / காதலித்தவள் கைவிடுவது பற்

## காவியக் காதல்

காதல்! காதல்! என்று கவிகள் பாடினார்கள். அகநானூறு, கலித்தொகை, குறுந்தொகை, போன்ற சங்க நூல்களிலே அழகாகக் காதற் சுவையை வடித்துத் தந்திருக்கின்றார்கள்.

''கண்ணிமை போலவே காதலின்பத்தைக் காத்திடுவோமடா'' என்று பண்ணிசைத்துப் பாடினார்கள்.

காதல் சிறந்தது. உயர்ந்தது. உண்ண உண்ணத் தெவிட்டாதது. உண்மையான வழியிலே செலுத்தக் கூடியது. இன்ப துன்பத்தை ஏற்றுக் கொள்ளக் கூடியது. காதல் காட்டாற்று வெள்ளமல்ல. வேண்டாமென வெறுக்கும் வேப்பங்காயுமல்ல. இரண்டு உள்ளங்களின் இன்பப் பாடல் தான் என கனவு கண்டார் பலர்.

வாழ்விலே இன்பங் கண்ட வள்ளுவன் தாழ்விலாத காதலைப் போற்றுகின்றான்.

றிக் கூறுகின்றன. ஆனல் அவைகளெல்லாம் எமது காதலர்களுக்கு புரிவதில்லே. காதலிக்கும் விடயத்தில் ஒரு பெண் கைவிடப்படுகின்ருள் என்னும் போது அப்பெண்ணுக்கு உண்டாகும் பாதிப்பு ஏன் எமது பெண்களுக்கு முன்னரே புரிவதில்லே? வலே விரிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தும் கூட எமது பெண்கள் தாமாக தமது ஒரு சில உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து வலேயில் சிக்கும் புள்ளிமான்களாகின்ற போது நாம் அதிகம் ஆண்களே குறை கூறி விடமுடியாது. மேலும் எமது பெண்களின் மனவலிமை விண்வெளியில் பறந்து சாகசங்கள் புரியும் அளவிற்கு வளர்ந்திருக்கும் போது ஒரு ஆணுக்கு மட்டும் ஏன் அவள் தனது மன வலிமையை இழந்து விட்டுக் கொடுக்க வேண்டும். காதலித்தவள் உண்மையிலேயே கல்யாணம் வரை நிலேத்திருப்பான் என்று என்ன நிச்சயம்?

பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னேயிடத்தில் தோன்ருத பாசம் பத்து நாள் பழகிய பெண்ணிடத்திலே தோன்றுகின்றது. (?) எமது வாலிபர்களுக்கு அவ்வாறு தோன்றிய காதல் "உன் சம்மதம் இல்லேயேல் மரணம்" என கூறவைக்கின்றது. இது பற்றி நன்ருக சிந்தியுங்கள் பெண்களே. ஒரு சில ஆண்களின் ஓய்வு நேரப் பொழுது போக்கிற்காக ஒரு பெண்களேக் காதலிக்கும் காதலர்கள் எம் மத்தியில் இல்லாமலில்லே. காதலி என்பவள் வெறும் போகப்பொருளாக எத்தனே நாட்களுக்கு காதலன் பயன்படுத்தப் போகின்ருன்? யாரோ ஒருவன் தனது ஓய்வுநேரத்தினே இனிமையாக்குவதற்காக உங்களேப் பயன்படுத்துவதை ஏன் உங்களால் எதிர்க்கமுடியாது? அண்மையிலே ஒருத்தி தன் காதலனேக் கைப்பிடிக்கும் ஆசையோடு வாழ்ந்தவள். பெற்ருேர் இன்னும் ஒருவனே மணக்க நிர்ப்பந்திக்கும் நிலேயிலே தன் காதலே வீட்டுக்கு தெரியப்படுத்தப் போவதாக காதலனிடம் கூறுகின்ருள். ஆனல் அக்காதலனே இதனே வீட்டுக்குத் தெரியப்படுத்திஞல் "உன் பிரச்சினே தீர்ந்துவிடும், ஆனல் எனக்கு பிரச்சினேயாகிவிடும்" என்று வீட்டுக்கு தெரியப்படுத்தாது வைத்திருக்கின்ருன். எனவே தனது காதலே துறக்கவும் விரும்பாமல், இன்னெருவனின் மணமாலேயை சுமக்கவும்,

---

## ஆராய்ச்சியில் 'காதல்'

வயது வந்த ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே மலரும் அன்பானது காதல் என்று கருதப்படுகிறது.

பொதுவாக காதல் முகிழ்ப்பதற்குப் பாலுணர்வு (Sexual Instinct) அடிப்படையாக விளங்குகின்றது எனலாம். ஆனல் எல்லாக் காதலுக்கும் பாலுணர்வு இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லே.

காதலேப் பற்றி ஆராய்ந்து கூறும் ஃபிராய்டு "கட்டுப்படுத்தப்பட்ட பாலுறவு விருப்பால் விளேவதேகாதல்" ஆனல் பாலுறவுக்கு அப்பாற்பட்ட காதலும் உண்டு" என்கிருர்.

ஸ்டீஃபன்ஸ் என்னும் உளவியலறிஞர் "காதல் என்பது, பாலுறவு விருப்புணர்வுடன் கூடியதாகவோ; அத்தகைய விருப்புணர்வு இல்லாமலோ அமையலாம்" என்பார்.

எவ்வாருயினும் காதல் என்பது மிகவும் நுண்மையான ஓர் உணர்வினேக் குறிப்பது எனலாம்.

டர்னர் (Turner) என்ற அறிஞர் காதலே இருவகைப்படுத்துகின்ருர். ஒன்று திருமணத்தை நோக்கமாகக் கொண்டு பொறுப்பிற்கு அழுத்தம் தருவது; மற்றது பாலுறவுடன் சேர்ந்து உணர்ச்சிக்கு அழுத்தம் தருவது.

டாக்டர் புரொமில்லா சபூர் காதலேயும் பாலுறவையும் தொடர்பு படுத்தியே விளக்குகிருர். அதன்படி பாலுறவு இல்லாக் காதல்; பாலுறவு உள்ள காதல். காதலுள்ள பாலுறவு; காதலில்லாப் பாலுறவு என நாலு வகைப் படுத்துகின்ருர்.

அவன் தரும் தாலியை ஏற்கவும் விரும்பாத அவள் தன் வாழ்வினை கல்லறைக்கு அர்ப்பணித்து விடுகின்றாள். அவள் இறந்த செய்தி கேட்ட காதலன் அவளை இறுதியாக மணக்கோலம் பார்க்காவிடினும் பிணக்கோலமாவது பார்க்கவில்லை. மணமாலை போடவேண்டியவன் பிணமாலையாவது போடவில்லை. அவள் எவனது தாலிக்காக, குங்குமத்திற்காக ஏங்கினாளோ அவன், அவள் இறந்த பின் கூட குங்குமத்தை அணிவிக்கவில்லை இப்படியானது தான் உண்மைக் காதலா? அல்லது காதல் என்பது இன்பம் பெறுவது மட்டும்தானா? அறுகரிசி போட்டு மற்றவர்கள் வாழ்த்தி விடை கொடுக்க விடைபெறவேண்டிய பெண் வாய்க்கரிசி பெற்று தீயோடு சங்கமமாகின்றாள். இது தான் இன்றைய காதலின் ஆழம்.

காதலி இறந்த சோகம் கூட எமது ஒரு சில வாலிபர்களுக்கு இன்னும் ஒரு அழகான, செல்வமுள்ள பெண்ணைக் கண்டதும் பறந்தோடி விடுகின்றது. இவ்வாறு ஒருத்தியின் சாவுக்கும், கண்ணீருக்கும் காரணமானவனை இன்னொருத்தி எத்தனை இலட்சம் கொடுத்து வாங்குகின்றாள். பத்து இலட்சம், பதினைந்து இலட்சம் என தமக்கு, தாமே விலை பேசும் ஆண்கள் காதலிக்கும் போது ஏன் சீதனம் என்பதனை மறந்து விடுகின்றார்கள்? அவர்கள் தான் மறந்தாலும் அவனின் தகுதி என்ன? சீதனமின்றி என்னை ஏற்றுக் கொள்வானா? என்பதை ஏன் பெண்களே நீங்கள் அவதானிக்க தவறுகின்றீர்கள். காதலிக்கும் போது நீங்கள் விடும் தவறுதானே, உங்கள் காதலன் கட்டிலிற்கு சொந்தமாகி தொட்டிலிற்கு சொந்தமல்ல என கூற வைக்கின்றது.

எனவே 20 ஆம் நூற்றாண்டை நெருக்கும் இக் கொடுமைகள் மீண்டும் மீண்டும் நடக்கின்றது என்றால் எம்மிடையே உள்ள பலவீனமான மனம் கொண்ட பெண்கள் தான் காரணம். இத்தகைய வலைகளுக்குள் சிக்கித் தம் வாழ்வைத் தாமே அழிவின் பாதையில் இட்டுச் செல்வதை நமது நங்கையர் இனியாவது தவிர்த்தல் நலமானது.

□

த. வனிதா

# அட்டைப்படம்

செல்வி ரஜனி சாந்ததேவன்

*எமக்குப் புத்தம் புதிய தொழிற்றுறையான கட்டிடக்கலையில் ஈடுபாடு கொண்டுள்ள இவர், யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கட்டிடக்கலை நிறுவனமொன்றில் கட்டிடப் படம் வரைகலைஞராகப் (Draughtsman) பணிபுரிகின்றார். கலை, இலக்கியங்களிலும், அறிவியற்றுறைகளிலும் மகளிர் அபிவிருத்தி தொடர்பாகவும் அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்.*

*அட்டைப் படத்திற்கு கலைத்துவமான புகைப்படங்கள், ஓவியங்கள் வரவேற்கப்படுகின்றன.*

இதன் அர்த்தம் என்ன? இதன் வேகம் என்ன? பாசமா? பண்பாடா? அவளைப் பிரிந்து வாழ இதை விட வேறு சந்தர்ப்பம் உண்டா?

அதைப்பற்றி அவள் சிந்திக்கவேயில்லை.

''அக்கா.....உங்கட அவர் காரில அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிருர். கால் கழட்ட வேணுமாம்.'' பத்மாவின் குரல் மட்டும் அவள் நெஞ்சில் நிழலாடியது.

தன்னை அறியாமலேயே ஆஸ்பத்திரி வார்ட்டை நோக்கி விரைந்தாள் கல்யாணி. □

# 3

வத்சலாவால் உண்மையில் அதை ஜீரணிக்க முடியவில்லை.

''ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்'' என்பது போல் ஆகிவிட்டது அவள் வாழ்க்கை.

அவள் ஊரைப் பகைக்கவில்லையே. ஊரை திருத்த அல்லவா முயன்ருள்? ஊருக்கு வழிகாட்ட அல்லவா முயன்ருள்? ஊர் அவள் வாழ்வை அல்லவா அழித்து விட்டது.

அல்லது அவள் 45 வயது வரை கன்னியாகவே இருப்பாளா?

இன்று அவள் வீட்டில் முக்கியமான நாள். பிறந்தநாள் போல், திருமண நாள் போல்.... திருவிழா போல் ஒரு விழா......

கலைப் பட்டதாரியாகி வெளியேறி விட்டுத் திணைக்களத்தில் கிளாக்காக வேலைக்கமர்ந்தாள் வத்சலா. படித்த பெண்கள் வீடு, வேலை என்றிராமல் சமூகத்தில் சில முன்னேற்றமான சேவைகளிலும் ஈடுபட வேண்டும் என்ற வாதத்துடன் நில்லாது செயலிலும் காட்டினுள்.

மாதர் சங்கங்களை உருவாக்கினுள். அதன் மூலம் பெண்களின் நிலையை வளர்த்தாள்.

சமூகத்தில் நல்ல அந்தஸ்து தன்னைத் தேடி வருவதை உணர்ந்தாள். சமூகப்பணியிலும் ஈடுபட்டாள்.

அந்த ஊரில் சங்கங்கள் கழகங்கள் எதுவும் அவள் இல்லாது இயங்கா என்ற நிலை உருவாகியது.



வேலையோடு சமூகப் பணியும் கூடவே போக்குவரத்துப் பிரச்சனை பெரும் பிரச்சனையாகி விட்டது. இதனுல் முதன் முதல் அந்தக் கிராமத்தில், மோட்டார் சைக்கிள் ஓடியவள் என்ற பெயரையும் எடுத்தாள்.

ஊரே வியந்தது. மகிழ்ந்தது. வரவேற்றது. பெருமையாகப் பேசியது. அவள் முன் மாத்திரம். பின்னுல்...... இத்தனை பெருமையுடன் வாழ்ந்த அவளுக்கு திருமணம் ஏற்பாடு செய்வதில் பெரும் சிரமப்பட்டார் தந்தை. அவளைப் போற்றினர். ஆனுல் ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை.

'நான் சொன்னு கேட்டாளா. பெம்பிளையெண்டா பெம்பிளை மாதிரி இருக்க வேணும். ஆண்மாதிரி கொண்டு திரிஞ்சா எவன் வருவான்......'' அம்மம்மாவின் ஓயாத ஓலம் இது.

''சொன்னு கேட்டாத் தானே, இவதான் ஊரத் திருத்தப்போருவாம்......'' தந்தையின் ஏச்சு.

''மோட்டச்சயிக்கிள் ஓடுகிறவள் கெட்டவள் தான்... நல்ல பெம்பிளையள் இப்படிச் செய்வினமே .. உது வீட்டுக்கு உதவாதது ..' பக்கத்துவீட்டுப் பாக்கியம்

அவளை நேரில் போற்றிய ஊர் வரும் மாப்பிளைகளுக் கெல்லாம் சொல்லியனுப்பும் வாழ்த்து.

மனமொடிந்து போனுள் வத்சலா ..... மோட்டார் சைக்கிள் ஓடியது தப்பா? அதனுல் அவள் கெட்டவளா?

ஆடி ஒடுங்கி தன் தன் அறை என்ற நிலைக்கு வந்து விட்டாள் வத்சலா......

இது அவள் கடந்த கால வாழ்க்கை. இன்று அதே வழியில் அவள் அக்கா மகள் 'பிரியா'' வருவதை அவள் விரும்பவில்லை.

பிரியாவை மோட்டார் சைக்கிள் ஓடவிடக்கூடாது அவள் வாழ்வும் என் வாழ்வு போல் ஆகிவிடும்......கூடாது......கூடாது. அவள் வாழவேண்டும்.

அவசர அவசரமாக வெளியே வந்தவள் ஆச்சரியத்துடன் நின்ருள்.

''அன்ரி......ரொபி......'' மகிழ்ச்சி ததும்ப ரொபியை நீட்டினுள் பிரியா. ''அன்ரி சாளி ஓடுறன் பாருங்கோ''

சிட்டாகப் பறந்து சாளியில் ஏறி அதை ஓட்டினுள் பிரியா. அவள் பின் அவள் சினேகிதிகள் பலர் பட்டாளமாக சாளியில் தொடர்வதைப் பார்த்த வத்சலா எதுவும் சொல்ல முடியாது திகைத்து நின்ருள்.

''என்ர...மகளுக்கும் ஒரு சாளி வாங்க வேணும்......'' பக்கத்து வீட்டு பாக்கியம் ஏங்குவது காதில் விழுந்தது. அன்று இதே பாக்கியம் தானே தனக்கு வசை பாடி தன் வாழ்வையே அழித்தவள் .....

ஓ... சமுதாயம் மாறித்தான் வருகிறது? □

## உலா

நிலா —

### ஆக்கக் கலைகளின் கண்காட்சி:

யாழ். உள்ளுராட்சித் திணைக்களம், யாழ், ரோட்டரிக் கழகம் ஆகியன இணைந்து நடாத்திய ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவிய சிற்ப கண்காட்சி 1989 ஒக்டோபர் 28, 29, 30 ஆம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. ஈழத்துக் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் அனைவரும் இம் முயற்சியை ஒருமித்துப் பாராட்டினர். பொது மக்களும் மாணவர்களும் கண்காட்சிபற்றித் தங்களுக்குப் போதிய அறிவித்தல் கிடைக்கவில்லையெனக் குறைபட்டுக் கொண்டனர்.

கண்காட்சி குறுகிய கால அவகாசத்தில் ஒழுங்கு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. இவ்வளவு குறுகியகாலத்தில் அநேக சேகரிப்புகளைக் காட்சிப்படுத்தியமைக்காக

முன்னின்று உழைத்தோர் பாராட்டுக் குரியவர்கள். ஆயினும் இவ்வாறான கண்காட்சிகளுக்கு அவசரம் தேவையில்லை. ஆறுதலாக நிறைவாகச் செய்திருத்தல் சாத்தியமே.

இதுகாலவரை ஈழத்தில் வெளிவந்த நூல்களில் 30 – 40 வீதமானவையே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன என்பது அறிஞர் பலரது மதிப்பீடாகும். ஓவியம், சிற்பம், புகைப்படம் போன்றனவற்றின் சேகரிப்புக் குறைவே. என்றாலும் ஓவியங்களில் பல எம் மண்ணவர் திறமை விண்ணளவென பெருமையுற வைத்தது. குறிப்பாக எமது பெண்கள் ஓவியத்துறையில் அதிக ஆர்வம் காட்டுகின்றமை பாராட்டுக்குரியது. காட்சிப்படுத்திய ஓவியங்களில் 60 வீதத்தினர் (20க்கு மேற்பட்டோர்) பெண் ஓவியர் என்பது பூரிப்படைய வைத்தது. கண்காட்சியை ஒட்டி எழுந்த சில சிந்தனைகள்;

* ஈழத்துத் தமிழர்களால் எழுதப்பட்ட, ஈழத்துத் தமிழர் பற்றி எழுதப்பட்ட அனைத்து நூல்களும் (ஒவ்வொரு பிரதியாயினும்) ஓரிடத்தில் தொடர்ந்து சேகரிக்கப்பட்டு வரத்தக்கதோர் அமைப்பை (சுவடிகள் திணைக்களம் போன்று) எமக்கென எம் மண்ணில் நாம் நிறுவிக்கொள்ள வேண்டும்.

* ஓவியம், சிற்பம், ஏனைய அரும்கலைப்பொருட்கள் என்பனவற்றைச் சேகரித்து ஒரு கலாமண்டபத்தில் நிரந்தரமாக வைப்பதற்கு ஆவனசெய்தல் வேண்டும். இங்கு எமது பாரம்பரிய ஏனைய நுண்கலைகள் ஒலி, ஒளிப் பதிவில் வைக்கப்பெற்று, வேண்டுவோர் வேண்டியவேளை காணக் கூடிய ஒழுங்குகளும் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

* நூல் வெளியீடும், சந்தைப்படுத்தும் நிறுவனங்களை அதிகரிப்பதற்கு ஆக்கபூர்வமான திட்டங்கள் இயற்றப்பட்டு, அவை செயலுறுப்பெறவேண்டும்.

மொத்தத்தில் கண்காட்சியால் விளைந்த நிறைவுகள் பல. குறைகள் சில. கண்காட்சியை ஏற்பாடு செய்வதில் கருத்தைச் செலுத்திய யாழ். உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா பாராட்டுக் குரியவர். அவர் ஒரு கலை ஆர்வலர். அவர் தமிழ்ப் பணி தொடர எம்மவர் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்.

## தமிழ் நூல்களின் ஆய்வு:

கலை, இலக்கியக் களம் '1987/88 இல் ஈழத்தில் வெளிவந்த தமிழ் நூல்களின் ஆய்வு' என்ற தலைப்பில் தெல்லிப்பளையில் அண்மையில் ஆய்வரங்கு ஒன்றினை நடாத்திற்று. இடம்பெற்ற ஆய்வுகள் (15 தலைப்புகளில்) அனைத்தும் தட்டச்சிற் பதிப்பிக்கப்பெற்று சிறு தொகைப்பணத்திற்குப் பார்வையாளருக்கு வழங்கப்பட்டமை பயனுள்ள முயற்சி. வாய்வீச்சில் நேரத்தைச் செலவழிக்கும் மரபைமீறி 15 நிமிடங்களில் ஆய்வாளர் தமது ஆய்வுப் பொழிப்பை மேடையில் தெரிவிக்கப் பணித்தமை நல்ல முன்மாதிரி. அயலவர் என்று பார்க்காது அவ்வத்துறைகளில் அதிக ஈடுபாடும் பயிற்சியுமுள்ளோரைத் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்யப் பணித்திருப்பின் மிக்க பயனுடையதாய் அமைந்திருக்கும்.

கலை, இலக்கியக் களத்தினர்- குறிப்பாக கலாநிதி நா. சுப்பிரமணியன், திருமதி கோகிலா மகேந்திரன், இவ் இலக்கியப்பணிக்கு நிதியுதவி வழங்கியோர் பாராட்டுக் குரியவர்கள். குறை நிறைகளை உள்வாங்கி குறையைக் குறைத்து நிறைவைப் பெருக்குக. □

மில்க்வைற் தொழிலகம்
நங்கைக்கு நல்வாழ்த்துக்கள்

நாடும் முன்னேற நாமும் பணிதொடர
உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாருங்கள்.
மில்க்வைற் மேலுறைகளை அனுப்பி
நங்கையர் நல் உழைப்பால் கைத்தறியில் உருவான
துவாய்கள், லேஞ்சிகள் ஆகியவற்றை
அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# மில்க்வைற்

## யாழ்ப்பாணம்.

**QUICK STAR** ன் நல்வாழ்த்துக்கள்

"நங்கைக்கு"

## *Hayley's Photo Print (Pvt) Agent*

கொம்பியூட்டர் மூலம் கலர்ப்படப் பிரதிகள்

★ குறைந்த கட்டணம் ★ குறுகியகால சேவை

*மங்கள வைபவங்கள் மங்காது நிலைத்துநிற்க*
*கலர், கறுப்பு வெள்ளை புகைப்படம்*
*சிறந்த முறையில் அமைத்திட,*
அவசர பாஸ்போட், அடையாள அட்டை
மற்றும் கலர்ப் படங்கள் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
*மறவாதீர்கள்:*

**QUICK STAR** (Near Manogara Junction)

163, Navalar Road, JAFFNA.



சிறுவர்களுக்கான சிறந்த
விளையாட்டுப் பொருட்கள்

வீட்டுப் பாவனைக்குத் தேவையான
அத்தியாவசிய ஆடம்பரப்
பொருட்கள்.

மணிக்கூட்டு வகைகள்

சொப்பிங் பாக் வகைகள்

# ஓமான்ஸ் பலஸ்



444/1. ஆஸ்பத்திரி வீதி.. யாழ்ப்பாணம்.
(பஸ்நிலையம் முன்பாக)

PROP: **S.E. தவலிங்கம் (ஓமான்ஸ்)**